Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JUNE 8, 2021

செவ்வாய்க்கிழமை ஜூன் 8, 2021 | ஒளி: 07 கதிர்: 16 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## 'பாடசாலைகளைத் திறப்பதற்கு திகதியை குறிப்பதில் சிரமம்'



நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில், பாடசாலைகளைத் திறப்பது குறித்த உரிய திகதியை அறிவிப்பதில் சிரமம் உள்ளதாகத் தெரிவித்த கல்வி அமைச்சரான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், பல மாதங்களாக வீட்டுக்குள்ளேயே சிறுவர்கள் அடைந்து கிடைப்பதால் கடும் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் இந்த நிலைமையை நிறைவு செய்து, விரைவில் பாடசாலைகளைத்

தொடர்ச்சி P2

# 'தன்னிச்சையான முடிவு பஞ்சத்துக்கே வழிசமைக்கும்'

எந்தவொரு செயற்பாடுகளையும் திட்டமிட்டு, அமல்படுத்தாத இந்த அரசாங்கம், மக்களை உயிருடன் கொல்வதற்கே முயற்சிகளை மேற்கொண்டுள்ளது எனக் குற்றஞ்சாட்டியுள்ள எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, "அதனோர் அங்கமாகவே இரசாயன உரத்தைத் தடைசெய்துள்ளது. அரசாங்கத்தின் உள்நோக்கம் இதிலிருந்து புலனாகிறது" என்றார்.

"அரசாங்கத்தின் இந்தத் தன்னிச்சையான முடிவு நாட்டில் உணவுப் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் என்பதுடன், பாரிய பஞ்சத்துக்கும் வழிவகுக்கும்" என்றார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்று (07) அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் அவர், மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இயற்கை உரப் பயன்பாட்டை அதிகரிப்பதில் எமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், பொறுப்பற்ற முறையில் திடீரென எடுக்கப்பட்ட இத்தீர்மானம் விரைவில், இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களின் வாழ்க்கையிலும் பேரழிவைத் தரும் என்றார்.

தொடர்ச்சி P2



ஆடைத் தொழிற்சாலைக்கு முன்பாக எதிர்ப்பு:

## கைதான 10 பேரும் விடுதலை



■ சண்முகம் தவசீலன்

புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிசாலையைத் திறப்பதைத் தடுப்பதற்காக, எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட புதுக்குடியிருப்பு பிரதேச சபை உபதவிசாளர் க.ஜெனமேஜெயந் உள்ளிட்ட பத்து பேர், புதுக்குடியிருப்பு பொலிஸாரால கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் பொலிஸ் பிணையில் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில், அதிகளவான கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்படுள்ளனர். இதனை தொடர்ந்து, புதுக்குடியிருப்பின் 9 கிராம அலுவலர் பிரிவுகள் முற்றுமுழுதாக முடக்கப்பட்டிருக்கும் நிலையில், நேற்று (07), ஆடைத்தொழிற்சாலைக்கு பணியாளர்களை வருகை தருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

## 'தடுப்பூசி தாமதத்துக்கு எதிர்க்கட்சியே காரணம்'



எமது நாட்டில், தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு தாமதமடைந்தமைக்கு எதிர்க்கட்சியே காரணமெனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா, நாம் 'சைனோஃபாம்' தடுப்பூசியை கொண்டு வர முயற்சித்த போது, பாராளுமன்றத்தில் பல நாள்கள் விவாதம் நடத்தி, இதைத் தடுக்க பல நடவடிக்கைளை எதிர்க்கட்சியினர் முன்னெடுத்தனர். புதிய களனி பாலத்திலிருந்து அத்துருகிரிய வரையான புதிய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகள்,

தொடர்ச்சி P2

## ஒருநாள் மட்டுமே சபையமர்வு: மதிய போசனம் இன்றி நடக்கும்



கொரோனா வைரஸ் தொற்றுச் சூழல் காரணமாக இவ்வார பாராளுமன்ற அமர்வு, இன்று (08) மட்டுமே நடைபெறும்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (07) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, "இன்று (08) முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை பாராளுமன்ற அமர்வுகள் முன்னெடுக்கப்படும்" என பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தஸநாயக்க தெரிவித்தார்.

இன்று முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை நிதி முகாமைத்துவப் (பொறுப்பு) (திருத்தச்) சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு, ஏற்றுமதி இறக்குமதி (கட்டளை) சட்டத்தின் கீழான

தொடர்ச்சி P2

கப்பல் விவகாரத்தில்

## 'சட்டமா அதிபருக்கு ஒத்துழைப்பு நல்குவோம்'

எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் ஏற்பட்ட தீயால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்புக்கான நட்டஈட்டை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பான விசேட சந்திப்பு, நீதியமைச்சர் அலி சப்ரி தலைமையில் நேற்று (7) அமைச்சில் நடைபெற்றது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய நடைபெற்ற இச்சந்திப்பில் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, மீன்பிடி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இதன்போது, கப்பலால் ஏற்பட்ட தீயால் நாட்டின் பொருளாதாரம், சூழல் கட்டமைப்பு, மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்தி செய்வதற்காக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது இக்கலந்துரையாடலின் அடிப்படை நோக்கமாக அமைந்திருந்தது.

தொடர்ச்சி P2



## பேக்கரி, இனிப்புப் பண்டங்களின் விலை அதிகரிக்கும் சாத்தியம்?

இனிப்புப் பண்டங்கள், பேக்கரி உற்பத்திகள் துறை தமது உற்பத்திப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க பேக்கரி உரிமையாளர்கள் திட்டமிட்டுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூலப்பொருள்கள், போக்குவரத்து, அந்நியச் செலாவணி மற்றும் வரிகள் போன்றவற்றில் கட்டண அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால், தொடர்ந்தும் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவே இந்தத் தீர்மானத்தை எட்டியுள்ளதாக அறியமுடிகின்றது.

தொடர்ச்சி P2

## சடலங்களில் கொள்ளையிட முயன்ற இருவர் கைது



■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையில் உள்ள ஊரிக்காடு மயானத்தில், கல்லறைகளைத் தோண்டிய இருவர், நேற்று (07) கைதுசெய்யப்பட்டுள்ளனர்

ஊரிக்காடு மயானத்தில் கல்லறைகளை இருவர் தோண்டி வருவதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல்களின் அடிப்படையில், ஸ்தலத்துக்கு விரைந்த வல்வெட்டித்துறை பொலிஸார், குறித்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது, நகைகளுடன்

தொடர்ச்சி P2

## 'குடு அஞ்சு'வின் ஜோடி கைது

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், இளம் தம்பதியினர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் விற்பனையாளரான இரத்மலானை 'குடு அஞ்சு' என்று அழைக்கப்படுபவரின் சகோதரனின் மகனும், மகனின் மனைவி ஆகிய இருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மிலேனியம் சிட்டி வீட்டுத் தொகுதியில் மறைந்திருந்த வேளையிலேயே இவ்விருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான அந்த இளம் ஜோடியிடமிருந்து 5 கிராம் ஐஸ் போதைப்பொருள் 14 இலட்சம் ரூபாய் பணம், பணத்தை எண்ணும் இரண்டு இயந்திரங்கள், நான்கு அலைபேசிகள் என்பனவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

தொடர்ச்சி P2



## 77 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிப்பு

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து, தனிமைப்படுத்தப்பட்டிருந்த சில பகுதிகள், நேற்று (07) அதிகாலை 4 மணியுடன் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், 11 மாவட்டங்களைச் சேர்ந்த 77 கிராம சேவையாளர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி, கம்பஹா, நுவரெலியா, மாத்தளை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கொழும்பு,

தொடர்ச்சி P2




## புறப்பட்ட 26 நிமிடங்களில் தப்பியது பயிற்சி விமானம்

### விமானிகளின் சாமர்த்தியத்தால் அனர்த்தம் தவிர்க்கப்பட்டது

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான பயிற்சி விமானங்களில் ஒன்றான செஸ்னா 150 என்ற விமானம், தொழில்நுட்பக் கோளாறு காரணமாக அவசரமாகத் தரையிறக்கப்பட்டது. இதனால், அந்த விமானம் தப்பியுள்ளது. பயிற்சி விமானிகள் இருவரும் தப்பித்துள்ளனர்.

இந்தச் சம்பவம், நேற்று (07) திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. திருகோணமலையில் நிலாவெளி கடற்கரைக்கு வடக்கே உள்ள ஈராகண்டி பகுதியிலேயே அந்த விமானம் அவசர அவசரமாகத் தரையிறக்கப்பட்டது.

'செஸ்னா-150' என்பது, ஒரு பயிற்சி விமானமாகும், இது, விமானிக்கான அடிப்படை பயிற்சியளிப்புக்காக பயன்படுத்தப்படுகிறது. அந்த விமானம், சீனா வளைகுடாவில் இருந்து, நேற்று (07)

தொடர்ச்சி P2

## மகனைத் தேடிய மற்றுமொரு தாய் மரணம்



■ க. அகரன்

இறுதிப் போரில், முள்ளிவாய்க்காலில் வைத்து காணாமல் ஆக்கப்பட்ட செஞ்சுடர் மாஸ்டரின் தாயாரும் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஊடகப் பேச்சாளர் அ.ஈழம் சேகுவேராவின் தாயாருமான தேவகி அம்மா, நேற்று (07) உயிரிழந்துள்ளார்.

வவுனியாவை வசிப்பிடமாகக் கொண்ட தேவகி அம்மா, காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை, கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் தேடி அலைந்திருந்த நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார். அவர், புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார்.

## ஒருமாத இடைவெளியில் இருவரும் திடீர் சந்திப்பு



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே நேற்று (07) சந்தித்துப் பேசியுள்ளார்.

அலரி மாளிகையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. கடந்த ஏப்ரல் மாத இறுதியில் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து, ஒரு மாத இடைவெளியில் இருவரும் இரண்டாவது முறையாக நேற்றுச் சந்தித்துக் கொண்டுள்ளனர்.

இலங்கை, இந்தியாவில் மிகவேகமாகப் பரவும் கொரோனா வைரஸைத் தடுப்பது தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து, இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நாகம்மாளை வழிபட்ட 12 பேருக்கும் தனிமை



■ தீஷான் அஹமட்

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தங்கபுரம் பகுதியிலுள்ள அருள்மிகு நாகம்மாள் கோவிலில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த 12 பேர் கைது செய்யப்பட்டு, தனிமைப்படுத்தப்பட்டனர்.

கொரோனா சட்டவிதிகளை மீறி, நேற்று முன்தினம் (06) பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த போதே, சம்பூர் பொலிஸார், இவர்களைக் கைது செய்தனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘தன்னிச்சையான முடிவு பஞ்சத்துக்கே வழிசமைக்கும்’

இரசாயன உரத்தைத் தடை செய்துவிட்டு, செயற்கை உரங்களை இறக்குமதி செய்யப் போவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அப்படியாயின், உலகின் முன்னணி குப்பைக் குவியலாக நாட்டை மாற்றும் சதித்திட்டத்தை அரசாங்கம் தீட்டியுள்ளதென எண்ணத் தோன்றுகின்றது என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார்.

‘குப்பைகளான கழிவு உரத்தை இறக்குமதி செய்வதால் நாட்டில் பக்டீரியா பரவும் என்பதுடன், இந்த இறக்குமதியானது விலங்குகள் மற்றும் தாவரவியல் சட்டத்துக்கு முரணானது’ என்றும் அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உரத் தடையால் மோசமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. இதனால், விவசாயிகள் உதவியற்றவர்களாக மாறி, விவசாய திணைக்களங்களுக்கு முன்பாக உரத்துக்காகக் காத்துக் கிடக்கின்றனர். எனவே, அரசாங்கத்தின் இந்தத் தன்னிச்சையான முடிவுக்கு விவசாயிகள் பலியாகியுள்ளனர் என்றும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## கைதான 10 பேரும் விடுதலை

இதையடுத்து, ஆடைத் தொழிற்சாலை திறப்பதைத் தடுப்பதற்காக, நேற்று (07) காலை, புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலைக்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, இந்த எதிர்ப்பு நடவடிக்கைய முன்னெடுத்த குற்றச்சாட்டில், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உப- தவிசாளர் க.ஜெனமேஜெயந் உள்ளிட்ட 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்

இதேவேளை, குறித்த பகுதிக்கு வருகை தந்து எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட மக்களையும் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## 77 கிராம சேவகர் பிரிவுகள் விடுவிப்பு

மட்டக்களப்பு, களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கிராம சேவகர் பிரிவுகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன.

## ஒருநாள் மட்டுமே சபையமர்வு: மதிய போசனம் இன்றி நடக்கும்

ஒழுங்கு விதிகள் என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை, “நண்பகல் 12 மணி முதல் பிற்பகல் 4.30 மணிவரை எதிர்க்கட்சியால் கொண்டுவரப்படும் நாட்டின் தற்போதைய நிலைமைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தை முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது” என செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

“வாய்மூல விடைக்கான கேள்விகளுக்கு நேரத்தை ஒதுக்காதும், மதிய போசனத்துக்காக சபை நடவடிக்கைகளை இடைநிறுத்தாதும் தொடர்ந்தும் விவாதத்தை முன்னெடுத்துச் செல்லத் தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கிறது” என்றார்.

## சடலங்களில் கொள்ளையிட முயன்ற இருவர் கைது

அடக்கம் செய்யப்பட்ட சடலங்களில் இருந்து நகைகளை எடுக்கவே, கல்லறைகளைத் தோண்டியதாக வாக்குமூலம் அளித்துள்ளனர்.

சந்தேகநபர்களால் அகழப்பட்ட கல்லறைக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ‘குடு அஞ்சு’வின் ஜோடி கைது

அவ்விருவரும் மறைந்திருந்த வீட்டுக்கு வாகனங்களில் வருவோர், பணம் செலுத்திவிட்டு செல்வர் என்றும், சிறிது நேரத்துக்குப் பின்னர் வருபவர்கள், போதைப்பொருள்களை பெற்றுச் செல்வார்கள் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதெனத் தெரிவித்த பொலிஸார்.

சந்தேக நபர், முஸ்லிம் பெயரிலேயே தலைமறைவாக வாழ்ந்துள்ளார். அவரது மனைவி, தன்னையோர் ஆடையலங்கார ஒப்பனையாளராக இனங்காட்டிக்கொண்டுள்ளார் என விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

## புறப்பட்ட 26 நிமிடங்களில் தப்பியது பயிற்சி விமானம்

காலை 10:22 க்கு புறப்பட்டு காலை 10:48 க்கு அவசர அவசரமாகத் தரையிறங்கியது.

சம்பவம் நடந்த நேரத்தில் இரண்டு விமானிகள் செஸ்னாவில் இருந்தனர், இருவருக்கும் எவ்விதமான ஆபத்துகளும் ஏற்படவில்லையென இலங்கை விமானப்படை பேச்சாளரான குரூப் கெப்டன் துஷன் விஜேசிங்க தெரிவித்தார்.

“இரு விமானிகளின் திறமையால் ஒரு பேரழிவு தவிர்க்கப்பட்டது” என்று இலங்கை விமானப்படை தெரிவித்துள்ளது.

எனினும், இது குறித்து விசாரணை நடத்த விமானப்படை தளபதி ஏர் மார்ஷல் சுதர்ஷனா பதிரண சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பணித்துள்ளார்.

## ‘பாடசாலைகளை திறப்பதற்கு திகதியை குறிப்பதில் சிரமம்’

திறப்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (7) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

மாணவர்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்து, பாடசாலைகளைத் திறக்க மிக விரைவில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்த அவர், தற்போது முன்னெடுக்கப்பட்டுச் செல்லும் இணையவழிக் கற்றல் செயற்பாடுகள் முழுமையற்றது. என்றாலும், அந்த வேலைத்திட்டத்தை விரிவுபடுத்துவது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்தார்.

இதற்காக அரசாங்கத்தின் டிஜிட்டல் கொள்கைக்கமைய, டிஜிட்டல் களத்துக்கான 2,000 யோசனைகள் கிடைத்துள்ளன என்றும் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க குறித்த யோசனைகளை முன்வைத்தவர்களுடன் கலந்துரையாடுவதாகத் தெரிவித்த அமைச்சர், பலவீனங்களைத் தவிர்ப்பதன் மூலம் இணையவழிக் கல்வியை முறைப்படுத்த மேலும் யோசனைகளை முன்வைக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

## ‘தடுப்பூசி தாமதத்துக்கு எதிர்க்கட்சியே காரணம்’

நேற்று (07) அலரிமாளிகையில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் “சூம்” தொழிநுட்பத்தின் ஊடாக ஆரம்பிக்கப்பட்டது. அந் நிகழ்விலேயே இராஜாங்க அமைச்சர் லன்சா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

‘சைனோஃபாம்’ தடுப்பூசி உரியதல்ல; இதனால் பக்கவிளைவுகள் ஏற்படுமென எதிரணியினர் கூச்சலிட்டனர். ஆனால், கொரோனா தடுப்பூசிகளில் முன்னிலையில் ‘சைனோஃபாம்’ தடுப்பூசியே உள்ளதென அமெரிக்கா கூட ஏற்றுக்கொண்டுள்ளது” என்றார்.

எனவே, இந்தத் தடுப்பூசியைக் கொண்டு வருவதில் தாமதத்தை எற்படுத்தியது எதிர்க்கட்சியாகுமெனத் தெரிவித்த அவர், பாராளுமன்றத்தில் பல தடைகளை எதிர்க்கட்சி ஏற்படுத்தியது என்றார்.

“எதிர்க்கட்சி தடுத்திருக்காவிடின், இந்த 2 மாதங்களில் 6 இலட்சத்துக்கும் அதிகமான தடுப்பூசி கிடைத்திருக்கும். தடுப்பூசி செலுத்தலையும் நிறைவு செய்திருப்போம்” என்றார்.

எனினும், எதிர்க்கட்சியின் எல்லாத் தடைகளையும் முறியடித்துக்கொண்டு இன்று தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறோம் என்று தெரிவித்த அவர், “இன்னும் இரண்டொரு மாதங்களில் 70 சதவீதமானவர்களுக்கு தடுப்பூசி செலுத்திவிடுவோம்” என்றார்.

இதேவேளை, மத்திய அதிவேக வீதியால் சில பகுதிகள் மூழ்குவதாக தொலைக்காட்சிகளில் காண்பிக்கப்படுவதாகத் தெரிவித்த அவர், எனினும் இந்த அபிவிருத்திப் பணிகளால் எந்தப் பிரதேசமும் நீரில் மூழ்கவில்லை.

நாம் ஏதாவது வேலைத்திட்டங்களை முன்னெடுக்கும் போது அந்த வேலைத்திட்டங்களை முன்னெடுக்க முடியாத வகையில் இவ்வாறான தடைகள் ஏற்படுத்தப்படும் என்றார்.

## நாகம்மாளை வழிபட்ட 12 பேருக்கும் தனிமை

கைதுசெய்யப்பட்ட 12 பேரும், நேற்று திங்கட்கிழமை (07) மூதூர் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போதே, அவர்கள் 12 பேரையும், இம்மாதம் 21ஆம் திகதிவரை தனிமைப்படுத்தல் முகாமுக்கு அனுப்பி வைக்குமாறு, சம்பூர் பொலிஸாருக்கு, மூதூர் நீதவான் உத்தரவிட்டார்.

கொரோனா தொற்று நிலை காரணமாக அதிகளவானோர் ஒன்றுகூடுதல், மத ஸ்தலங்களில் கூட்டு வழிபாடுகள் மற்றும் களியாட்டங்கள் உள்ளிட்டவைகளுக்கு அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பூர் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

## பேக்கரி, இனிப்புப் பண்டங்களின் விலை அதிகரிக்கும் சாத்தியம்?

“கடந்த இரு மாதங்களில் மூலப்பொருள்களின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன. இதனால் எமது வியாபாரங்களின் இருப்பை தக்க வைத்துக் கொள்வதில் நாம் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். உற்பத்திப் பொருள்களின் விலைகளில் அதிகரிப்புகளை மேற்கொள்ளாமல், துறையினால் செலவுகளை தாங்கிக் கொள்ள முடியாது” என துறையைச் சேர்ந்த உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

“தற்போது நாட்டில் நிலவும் தொற்றுப் பரவலுடனான சூழல் காரணமாக சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுவது மற்றும் மருத்துவச் செலவுகளும் எமக்கு அதிகரித்துள்ளன. குறிப்பாக முற்காப்பு நடவடிக்கைகளுக்காக நாம் பெருமளவு செலவிட வேண்டியுள்ளது” என மேலும் குறிப்பிட்டனர்.

இனிப்புப் பண்டத் துறை 150 பில்லியன் ரூபாய் பெறுமதி வாய்ந்ததாக அமைந்துள்ளது. உள்நாட்டு உற்பத்தித் துறையின் பெறுமதி ரூ.85 பில்லியன் என்பதுடன், சிறிய, நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களுடன் இந்தத் துறையின் பெறுமதி 95 முதல் 100 பில்லியன் ரூபாய்களாகும். பேக்கரி துறையில் சுமார் 1.5 மில்லியன் பேர் ஈடுபட்டுள்ளனர். இதில் 500,000 பேர் நேரடியாக தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன், மேலும் ஒரு மில்லியன் பேர் மறைமுகமாக ஈடுபட்டுள்ளனர்.

மூலப்பொருட்கள், பொதியிடல் பொருட்கள் மற்றும் போக்குவரத்து செலவுகள் போன்றன கடந்த இரு மாதங்களில் பெருமளவு அதிகரித்துள்ளன. ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் உள்நாட்டு சந்தையில் கோதுமை மாவின் விலை கிலோகிராம் ஒன்றுக்கு 6 ரூபாய், சீனி கிலோகிராம் ஒன்று 5 ரூபாய் மற்றும் கொழுப்பு இறக்குமதி வரி ரூ.650 மற்றும் மாஜரின் இறக்குமதி வரி ரூ.615 போன்றவற்றால் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏனைய மூலப்பொருள்களின் விலைகளும் சர்வதேச சந்தைகளில் ஏற்பட்டுள்ள விலை அதிகரிப்பால், இங்கும் அதிகரித்துள்ளன.

இறக்குமதி செய்யப்படும் பாம் ஒயில் விலையும் கட்டுப்படுத்தப்படவில்லை, சந்தையில் வேறுபட்ட விலைகளில் விற்பனை செய்யப்படுவதால், சிறிய, நடுத்தரளவு வியாபாரங்கள் அதிகளவு செலவை தாங்கிக் கொள்ள நேரிட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டனர்.

இந்த இரு துறைகளும் தொடர்ந்து இயங்குவதற்கு எதிர்காலத்தில் உற்பத்திப் பொருட்களின் மீது விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகும் என அவர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

## ‘சட்டமா அதிபருக்கு ஒத்துழைப்பு நல்குவோம்’

சட்டமா அதிபர் திணைக்களத்தால் எடுக்கப்படும் சட்டநடவடிக்கைக்கு பூரண ஒத்துழைப்பை சட்டமா அதிபருக்கு பெற்றுக்கொடுக்கவும் இதற்காக இத்துறையின் நிபுணர்களின் ஒத்துழைப்பைப் பெறவும் அதிகூடிய நட்டஈட்டைப் பெறுவதற்கான செயற்பாடை முன்னெடுப்பதாக உறுதியளிப்பதாக நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

# ‘மாற்றத்துக்கான பயணத்தில் ஒன்றிணையுங்கள்’

### சர்வதேச முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு

aஇலங்கை தனது பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் வழங்கும் பல்வேறுபட்ட முதலீட்டு வாய்ப்புகளின் முழுமையான பார்வையை இந்த நிகழ்வானது தருகிறது எனத் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கை மற்றும்a பிராந்தியத்தின் மாற்றத்துக்கான பயணத்தில் ஒன்றிணையுமாறு சர்வதேச முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இலங்கைமுதலீட்டுமன்றம் 2021இன்அங்குரார்ப்பணஅமர்வு, கொழும்பில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு அழைப்பு விடுத்தார்.

உலகில் வேகமாக வளர்ந்துவரும் பிராந்தியங்களில், முக்கிய சேவை மையமாக துறைமுக நகரத்தை மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கம் மற்றும் எதிர்பார்ப்பா எதிர்பார்ப்பாகும்.

முதலீட்டுச் சபை, இலங்கை வர்த்தகச் சங்கம் மற்றும் கொழும்பு பங்குச் சந்தை ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த, “2021 இலங்கை முதலீட்டு மன்றம்” என்ற தலைப்பிலான மூன்று நாள் அமர்வை இன்று (07) முற்பகல் ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே, ஜனாதிபதி அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2030ஆம் ஆண்டுக்குள், இலங்கையின் தேசிய உற்பத்தியைத் தற்போதைய மட்டத்திலிருந்து தனிநபர் மொத்தத் தேசிய உற்பத்தி 8000 அமெரிக்க டொலர்கள் வரை இரட்டிப்பாக்குவதற்காக, துரித பொருளாதார வளர்ச்சித் திட்டமொன்றைச் செயற்படுத்தியுள்ளதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சுட்டிக்காட்டினார். அரசாங்கத்தின் வளர்ச்சி இலக்கை அடைவதற்கான தளத்தை அமைப்பதற்கு, இவற்றைப் பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்ட அவர், சர்வதேச முதலீட்டாளர்களுக்கும் அழைப்பு விடுத்தார்.

# ‘தூய்மை பணியாளர்களின் அர்ப்பணிப்பை மதியுங்கள்’

எம்.றொசாந்த்

தூய்மைப் பணியாளர்களின் அர்ப்பணிப்பை நாமெல்லாம் மதிக்கவேண்டும் என பொதுமக்களிடம் கேட்டுக்கொண்ட யாழ்.மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், வடிகான்களில், கழிவுகளை கொட்டாமல் இருப்பதை உறுதிசெய்து கொள்ளவேண்டும். அதனூடாகவே நமது சுகாதாரம் பாதுகாக்கப்படும் என்றார்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியிலுள்ள வெள்ளநீர் வடிகால்களில் பிளாஸ்ரிக் கழிவுகள் உள்ளிட்ட கழிவுகளால் நிரம்பி காணப்பட்டன. அவற்றை துப்புரவு செய்யும் பணிகள், நேற்று (07) முன்னெடுக்கப்பட்டன.



குறித்த வடிகான்களில் கழிவுகள் நிறைந்து காணப்படுவதாக யாழ்.மாநகர சபை மேயர் சட்டத்தரணி வி.மணிவண்ணனுக்கு அப்பகுதி மக்கள் முறையிட்டுள்ளனர். அதனையடுத்து, அவ்விடத்துக்குச் சென்று வடிகான்களை பார்வையிட்டதுடன் யாழ்.மாநகர சபை தூய்மைப்படுத்தும் தொழிலாளிகளுக்கு அறிவித்து, வடிகான்களை துப்புரவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தார்.



இதேவேளை, மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வெள்ளநீர் வடிகான்கள் துப்புரவு செய்யப்படுகின்றன. துப்புரவு செய்யப்பட்ட வடிகான்களுக்குள் பொறுப்பற்ற சிலர் ஓரிரு கிழமைக்குள் கழிவுகளை கொட்டி வருகின்றனர் எனத் தெரிவித்த அவர், இந்நிலைமை எமக்கு கவலை அளிக்கின்றது.

யாழ்.மாநகர தூய்மைப்படுத்தும் தொழிலாளர்கள், போதிய இயந்திர வலுக்கள் இல்லாத நிலையில் பல சிரமங்களுக்கு மத்தியில் மனித வலு மூலமே துப்புரவு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். எனவே அவர்களின் அர்ப்பணிப்பான தொழிலை மதித்தாவது துப்புரவு செய்யப்பட்ட வடிகான்களுக்குள் கழிவுகளை கொட்ட வேண்டாமென பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.







## கொழும்புக்குள் நுழைய முயற்சி:

# ‘803 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர்’

அத்தியாவசிய சேவைகள் என்ற போர்வையில் கொழும்புக்குள் நுழைய முற்பட்ட 800க்கும் மேற்பட்டோர் நேற்று (07) பொலிஸாரால் திருப்பி அனுப்பப்பட்டனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டில் பயணக்கட்டுப்பாட்டு அமலபடுத்தப்பட்டுள்ள நிலையில், 28,784 வாகனங்கள் நேற்று (07) கொழும்புக்குள் நுழைந்தன.

இதன்போது, சுகாதார சேவைகளைச் சேர்ந்த 4,802 வாகனங்கள் கொழும்புக்குள் வந்துள்ளன. எவ்வாறாயினும், பயணக்கட்டுப்பாட்டை மீறி, கொழும்புக்குள் நுழைந்துகொள்ள முயன்ற 803 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் அஜித் ரோஹானா தெரிவித்தார்.

கொழும்புக்குள் நுழையும் வாகனங்களுக்கு விசேட அனுமதி வழக்கும் வகையில் வர்ண ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுகின்றன. கொழும்புக்குள் நுழையும் பிரதான வீதிகளில் வைத்து, வாகனங்களை வகைப்படுத்தி நிறுத்தும் பொலிஸார், அந்த வர்ண ஸ்டிக்கர்களை ஒட்டுகின்றனர். (படங்கள்: பிரதீப் தில்ருக்ஷன)

# டொல்பினும் கரையொதுங்கியது



வாத்துவ, தல்பிட்டிய கடற்பரப்பில் உயிரிழந்த டொல்பின், நேற்று (07) காலை கரையொதுங்கியுள்ளது.

இவ்வாறு கரையொதுங்கிய டொல்பின் தொடர்பிலான ஆரம்பகட்ட பரிசோனைகள், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, இந்துருவ கடற்கரையில் நேற்று முன்தினம் (06) டொல்பின் ஒன்றும் கரையொதுங்கியது. இந்த டொல்பின் சுமார் 4 அடி நீளமானது.

அத்துடன், நாட்டின் மேற்குக் கடற்பரப்பில் உயிரிழந்த 7 ஆமைகளும் நேற்று முன்தினம் கரையொதுங்கியிருந்தன.

மேலும், சுதுவெல்ல கடற்கரைப் பகுதியில் பவளப்பாறைகளின் சிதைவுகளும் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் கடற்கரைகளில் இவ்வாறு கரையொதுங்கும் கடல் வாழ் உயிரினங்களின் இறப்புக்கு, தீப்பற்றி எரிந்த எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்த இரசாயனப் பதார்த்தங்கள் காரணமா என ஆராயப்படுவதாக சமுத்திர பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.



# ஆழ்கடலில் திடீர் நோய்வாய்ப்பட்ட மீனவர்

ஆழ்கடல் பிரதேசத்தில் திடீரென நோய்வாய்ப்பட்ட மீனவர் ஒருவரை கரைக்குக் கொண்டு வந்து, சிகிச்சையளிக்கும் நடவடிக்கையை கடற்படையினர் முன்னெடுத்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, பேருவளையில் இருந்து 157 கிலோ மீற்றர் கடல் மைல் தொலைவான ஆழ்கடல் பிரதேசத்திலிருந்தே குறித்த மீனவர் நேற்று (07) கரைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளார்.

இந்த மாதம் முதலாம் திகதி, 6 மீனவர்களைக் கொண்ட மீனவர் குழுவொன்று, ‘தேஷி’ எனப்படும் படகில் மீன்பிடி நடவடிக்கைக்காக சென்றுள்ளனர். இதன்போது மீனவர் ஒருவர் திடீர் நோய்வாய்ப்பட்ட நிலையில், மீன்பிடி, நீர்வளம் திணைக்களம் ஊடாக கடற்படைக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, மீனவரைக் காப்பாற்றும் நடவடிக்கையை கடற்படையினர் நேற்று முன்னெடுத்தனர்.



# காசோலை வழங்கல்

கம்பஹா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சைப் பிரிவுக்கு ஒட்சிசன் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதிக்குரிய காசோலையை, ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன வழங்கியுள்ளார். கம்பஹா வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் பிரியந்த இல்லெபெருமவிடம் நேற்று (07) அவர் இதனைக் கையளித்தார். (படப்பிடிப்பு பிரதீப் பத்திரண)

## ரூ. 5,000 கிடைக்கவில்லை

# சமுர்த்தி அதிகாரியை தாக்கிய பெண் கைது

கொரோனா பரவலால் அமல்படுத்தப்பட்டுள்ள பயணக்கட்டுப்பாட்டால், அரசாங்கத்தால் மக்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கப்பட்டு வரும் நிலையில், குறித்த பணம் தனக்குக் கிடைக்காத கோபத்தில் இருந்த பெண்ணொருவர், சமூர்த்தி அதிகாரியொருவரைத் தாக்கிய சம்பவம் இரத்தினபுரி கொலன்ன பிரதேசத்தில் நேற்று (07) பகல் இடம்பெற்றுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான அதிகாரி, கொலன்ன ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளாரென பனாமுர பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து, தாக்குதலை மேற்கொண்ட பெண்ணை பொலிஸார் கைதுசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த பிரதேசத்திலுள்ள விகாரையொன்றில் 5,000 ரூபாய் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், விகாரைக்குச் சென்ற பெண், தனக்கும் 5,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதா என வினவியுள்ளார். இதன்போது தனது கையிலிருந்த பெயர்ப் பட்டியலை பரிசோதித்த சமுர்த்தி அதிகாரி, அவரது பெயர் அதில் உள்ளடக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார். இதனையடுத்து, தகாத வார்த்தைகளால் குறித்த அதிகாரியை அப்பெண் திட்டியுள்ளார். பின்னர் அந்த அதிகாரி, தனது கடமைகள் முடிந்து மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, குறித்த பெண்ணின் வீட்டுக்கு அருகில் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# அதிக விலைக்கு விற்றால் அனுமதி இரத்தாகும்

துஷிதகுமார சில்வா

பயணக்கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டுள்ள காலப்பகுதியில், அதிக விலைக்கு பொருட்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமென, பேருவளை பிரதேச செயலாளர் ரஞ்சித் பிரியசாந்த தெரிவித்துள்ளார்.

பேருவளை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட அளுத்கம, பேருவளை, பயாகல ஆகிய பொலிஸ் பிரதேசங்களை உள்ளடக்கும் வகையில் 367 வர்த்தக நிலையங்களைத் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், குறித்த வர்த்தக நிலையங்கள் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரையும் திறந்திருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எனவே, மாலை 6 மணிக்குப் பிறகு திறந்து வைக்கப்பட்டிருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

## மதுபானம் கடத்தியவரை

# மாம்பழச் சந்தியில் மடக்கிப் பிடித்தனர்

கனராசா சரவணன்

யாழ். நகரிலிருந்து அரியாலை பிரதேசத்துக்கு ஓட்டோவில் மதுபானங்களை சட்டவிரோதமான முறையில் கடத்திய ஒருவரை, மாம்பழச் சந்தியில் வைத்து நேற்று (07) மாலை பொலிஸார் மடக்கிப்பிடித்துள்ளனர்.

இதன்போது, 300 மதுபான போத்தல்களை கைப்பற்றியுள்ள யாழ்ப்பாணம் பொலிஸார், ஓட்டோவையும் கைப்பற்றியுள்ளனர்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து, மாம்பழச் சந்தியில் அப்பிரிவு பொலிஸார் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, யாழ். நகர் பகுதியிலிருந்து அரியாலை நோக்கிப் பயணித்த குறித்த ஓட்டோவை நிறுத்தி சோதனையிட்டனர். ஓட்டோவுக்குள் மதுபானங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமையைக் கண்டனர்.

இதனையடுத்து, மதுபானங்களை கடத்திச் சென்ற ஒருவரைக் கைது செய்ததுடன், அதிலிருந்து மதுபானப் போத்தல்களையும் கடத்தலுக்கு உபயோகிக்கப்பட்ட ஓட்டோவையும் மீட்டனர்.

கைதுசெய்யப்பட்டவரை, மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினர், யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

## சீரற்ற வானிலையால்

# 10 மாவட்டங்களில் 2,71,110 பேர் பாதிப்பு

கடந்த சில நாள்களாக நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற வானிலையால் 10 மாவட்டங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அத்துடன், 88 பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள 67,613 குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்து 71 ஆயிரத்து 110 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மேலும்,சீரற்ற வானிலையால் 17 பேர் உயிரிழந்துள்ளனர். ஐவர் காயமடைந்தும் இருவர் காணாமலும் போயுள்ளனர். 17 வீடுகள் முழுமையாகவும் 978 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. நிர்க்கதியான 6,177 குடும்பங்களைச் சேர்ந்த 26,806 பேர், 106 பாதுகாப்பு மத்திய நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

5,710 குடும்பங்களைச் சேர்ந்த 22,975 பேர் அனர்த்தங்களால் உறவினர் வீடுகளில் தங்கியிருக்கின்றனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. மேலும், சில பகுதிகளில் வெள்ளம் வடிந்தோடி வருவதுடன் ஆறுகளின் நீர்மட்டமும் குறைவடைந்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

# இலவசமாக யோகா பயிற்சி

யோகா பயிற்சி செய்வது நல்ல பயனுள்ள முடிவுகளைத் தருகின்றன. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றன, உடலின் வலிமையை கூட்டுகின்றன, பதற்றத்தையும் மன அழுத்தத்தையும் குறைக்கின்றன. எனவே, இலவசமாக வழங்கவுள்ள இப்பயிற்சியில் கலந்துகொள்ளுமாறு வாழும் கலை நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

நோய்க்கான காரணத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது, வானிலை மாற்றத்தாலும், மற்ற பிற வெளிப்புற மாசுகளாலும் நோய்வாய்ப்படுகிறோம். எனவே, கொரோனாவின் போது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் எளிய யோகாசனங்களையும் மூச்சுப் பயிற்சியையும் வாழும் கலை நிறுவனம்,இலவசமாக வழங்க இருக்கிறது. இப்பயிற்சி, இம்மாதம்



11, 12, 13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான விவரங்களை திருமதி உமா ஜனார்தனன் - 0776079220, திருமதி சுஜாதா இராம்பத்ரன் - 0767194545 ஆகிய அலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என வாழும் கலை நிறுவனம் அறிவித்துள்ளது.

# போலிச் செய்திகளைப் பரப்புவோர் மீது கடுமையான நடவடிக்கை

சமூக வலைத்தளங்கள் ஊடாக போலிச் செய்திகளைப் பரப்பியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தற்போது சமூக வலைத்தளங்களினூடாக போலியான செய்திகள் பரப்பப்படுவதாகத் தெரிவித்த பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹான, கொரோனா மற்றும் டெங்கு தடுப்புத் திட்டங்கள் தொடர்பாக பல்வேறு போலியான செய்திகளைப் பரப்பிவருவதாகவும் தெரிவித்தார்.

எனவே, போலிச் செய்திகள் சமூக வலைத்தளங்களில் பரவுவதைக் கண்காணிக்க சிறப்புக் குழுவொன்று அமைக்கப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தர்.

இவ்வாறு போலிச் செய்திகளை சமூக வலைத் தளங்களினூடாகப் பரப்புவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இவ்வாறான போலிச் செய்திகள் பரப்பப்படுவது, மக்களை பீதியடையச் செய்யும் செயலென்றும் அவர் தெரிவித்தார்.

## கப்பல் விவகாரம்;

# விசாரணைக்காக இரு குழுக்கள் நியமனம்

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தொடர்பாடல் கட்டமைப்பை பகுப்பாய்வு செய்வதற்காக, மற்றொரு குழுவை நியமிக்க அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களம் தீர்மானித்துள்ளது. அத்துடன், இக்குழுவின் கணினி குற்றப்பிரிவு அதிகாரிகள் இந்த குழுவில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதேவேளை, இக்கப்பல் தீப்பற்றிய சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்காக அரச பகுப்பாய்வு திணைக்களத்தால் மாத்திரம் 2 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அக்கப்பல் மூழ்கும் கடற் பரப்பிலிருந்து பெறப்பட்ட நீர் மாதிரி ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆடைத்தொழிற்சாலை திறப்பதற்கு எதிராக

# வழக்கு



■ சண்முகம் தவசீலன்

புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையை மீளத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள புதுக்குடியிருப்பு வர்த்தகர் சங்கத்தினர், அதற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

கொரோனா தொற்றின் பின்னர், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையை மீளத் திறப்பதற்கான அறிவுறுத்தல் கடிதம் ஒன்று புதுக்குடியிருப்பு, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலை மனிதவள முகாமையாளருக்கு, நேற்று முன்தினம் (06) வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்த அல்லது தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்ட அல்லது பரிசோதனையில் கொரோனா தொற்று அறியப்படாதவர்களைக் கொண்டு, உரிய சுகாதார

> **“ கொரோனா தொற்று அறியப்படாதவர்களைக் கொண்டு, உரிய சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடித்து, ஆடைத் தொழிற்சாலையை மீள இயக்குமாறும் சுயதனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்தோ அல்லது சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பத்திலிருந்தோ தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துதல் தவிர்க்கப்படல் வேண்டுமென்றும், அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது**

வழிகாட்டல்களைக் கடைப்பிடித்து, ஆடைத் தொழிற்சாலையை மீள இயக்குமாறும் சுயதனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளிலிருந்தோ அல்லது சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பத்திலிருந்தோ தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துதல் தவிர்க்கப்படல் வேண்டுமென்றும், அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சகல ஊழியர்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்குவதை உறுதிப்படுத்தவும், அதிக நோய்த் தொற்றுள்ள பிற மாவட்டங்களிலிருந்து வருபவர்கள் சம்பந்தமான தகவல்களை, தங்கள் பிரதேச பொதுச் சுகாதார பரிசோதகர் அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உடன் அறியத்தர வேண்டும்.

சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் தங்கள் உத்தியோகத்தர்களுக்கு எழுமாறான பி.சி.ஆர் செய்யப்படும் போது, அதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

ஊழியர்கள் வேலைசெய்யும் வேலைத்தளத்தின் கண்காணிப்பு கமெரா பதிவுகளைத் தேவைப்படும் போது, சுகாதார வைத்திய அதிகாரி, உத்யோகத்தர்கள் பார்வையிட ஒழுங்கு செய்யப்பட வேண்டும் எனவும், அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிலசாலையை மீளத் திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக, புதுக்குடியிருப்பு வர்த்தகர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாகர்கோவில் கடற்கரையில்

## 96 கிலோ கிராம் கேரளா கஞ்சா மீட்பு

■ எம்.றொசாந்த்

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் கடற்கரையில், நேற்று (07) காலை, 96 கிலோ கிராம் கேரளா கஞ்சா, கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

நாகர்கோயில் கடற்கரையில், கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு கள ரோந்துப் பணியின் போதே, கரையோரத்துக்கு அருகில் இருந்து, 3 சாக்குகளில் 96 கிலோ கிராம் கேரளா கஞ்சா கண்டெடுக்கப்பட்டது.

கடத்தல்காரர்களால் அவை கைவிடப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மீட்கப்பட்ட கேரளா கஞ்சா, கடற்படையின் மேற்பார்வையில், வடக்கு கடற்படைத் தளத்தில் வைத்து அழிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்காலில்

## குண்டு மீட்பு



■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில், நேற்று முன்தினம் (06) குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து, அப்பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர், குண்டை மீட்டு, நீதிமன்ற அனுமதியுடன் செயலிழக்கச் செய்தனர்.

கனகராயன்குளம் வைத்தியசாலையில்

## ‘ஆளணிப் பற்றாக்குறை’

■ க. அகரன்



வவுனியா, கனகராயன்குளம் வைத்தியசாலையில், ஆளணிப் பற்றாக்குறை நிலவுவதாக, வவுனியா வடக்கு பிரதேச சபை தவிசாளர் எஸ்.தணிகாசலம் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், கனகராயன்குளத்தில் வாழும் மக்களின் நலன்கருதி கிராமிய வைத்தியசாலையொன்றை அமைக்குமாறு பல்வேறு தரப்பினரால் விடுக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம், குறித்த வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டதாகவும் இருந்தபோதிலும், அதனைத் திறப்பதில் காலதாமதமாகி, பின்னர் அண்மையில் திறந்து வைக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த வைத்தியசாலைக்கு வைத்தியர் ஒருவருடன் உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், இருந்தபோதிலும், குறித்த வைத்தியசாலைக்கு அதிகளவான நோயாளர்கள் வருகின்றமையால் வைத்தியசாலையை இயக்குவதற்கு மேலதிக ஆளணி தேவையாக உள்ளதென்றும் கூறினார்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பிடம் முறையிட்டும், எவ்விதத் தீர்வும் கிடைக்கவில்லை எனவும், தவிசாளர் சாடினார்.

சகாய மாதாபுரத்தில்

## மேலும் 22 பேருக்கு கொரோனா

■ க.அகரன்

வவுனியா, சகாய மாதாபுரத்தில், மேலும் 22 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சகாய மாதாபுரத்தில், கொரோனா தொற்றாளர்கள் சிலர் அடையாளம் காணப்பட்ட நிலையில், சனிக்கிழமை (05) முதல், அக்கிரமத்தின் முடக்கல் நிலை கடுமையாக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கிராமத்தில் வசிக்கும் மக்களிடம் நேற்று முன்தினம் (06) சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில், 22 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, சுந்தரபுரம், மகாறம்பைக்குளம், தெற்கிலுப்பைக்குளம், தோணிக்கல ஆகிய பகுதிகளில், 8 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வவுனியாவின் தொற்றாளர் எண்ணிக்கை

## ஆயிரத்தை எட்டியது

■ க. அகரன்

வவுனியா மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ள நிலையில், உயிரிழந்தோர் எண்ணிக்கை 17ஆக அதிகரித்துள்ளது

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் நேற்று முன்தினம் (06) வரையான காலப்பகுதியில், வவுனியா மாவட்டத்தில் 1,040 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் அநேகமானவர்கள், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

இதேவேளை, தொற்றால் உயிரிழந்த 17 பேரும்,



பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

உங்கள் குடும்ப அங்கத்தவர்களின்

# ‘மரணங்களுக்கு காரணமாகாதீர்கள்’

■ எச்.எம்.எம்.பர்ஸான்

தேவையின்றி வீதிகளில் அலைந்து திரிந்து, உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் மரணங்களுக்கு நீங்களே காரணமாகாதீர்கள் என, கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நாளாந்தம் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

“இப்பகுதியில் கடந்த 4ஆம் திகதி, 52 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 14 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், கொரோனா தொற்றுக் காரணமாக ஒரு மரணமும் பதிவாகியுள்ளது. ஆகவே, தேவையின்றி வீதிகளில் அலைந்து திரிந்து, வீட்டிலுள்ள முதியோருக்கும் சிறியவர்களுக்கும்



கொரோனா தொற்றைக் கொடுத்து, உங்கள் குடும்ப அங்கத்தவர்களின் மரணங்களுக்கு நீங்களே காரணமாக அமைய வேண்டாம்.

அரசாங்கம் பிறப்பித்துள்ள சட்டதிட்டங்களை மதித்து, கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த பொதுமக்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்” என்று வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கர்ப்பிணிகளுக்கு பி.சி.ஆர் தீவிரம்

■ எம்.எம்.அஹமட் அனாம்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில், கொரோனா தொற்றுக் காரணமாக கர்ப்பிணிப் பெண்ணொவர் உயிரிழந்துள்ள நிலையில், வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கர்ப்பிணிகளுக்கு பி.சி.ஆர் பரிசோதனை தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதனடிப்படையில், 68 கர்ப்பிணிகளுக்கு, நேற்று (07) பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டதாகவும் அதன் மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி தேவராஜமுதலி ஸ்டீப் சஞ்ஜீவ் தெரிவித்தார்.

இந்தப் பரிசோதனையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ், சுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள் ஈடுபட்டனர்.



## மட்டக்களப்பில் விசேட சோதனை

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பிலுள்ள 14 பொலிஸ் பிரிவுகளிலும் உள்ள பிரதேசங்களில் விசேட வீதிச் சோதனை நடவடிக்கையை, பொலிஸார் நேற்று (07) முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது, பயணக் கட்டுப்பாட்டை மீறி பயணித்தவர்களை எச்சரித்து திருப்பி அனுப்பினர்.

இந்த விசேட வீதிச் சோதனை நடவடிக்கை, நேற்று (07) காலை 6 மணிமுதல் 14 பொலிஸ் பிரிவுகளிலும் உள்ள பிரதான வீதிகள், முக்கிய சந்திகள், சந்தைப் பகுதிகள் உள்ளிட்ட மக்கள் நடமாடும் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், கார்கள், மோட்டர் சைக்கிள்கள் என வாகனங்களில் பயணித்தவர்களும் நிறுத்தப்பட்டு, கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதேவேளை, மாவட்டத்தில் நேற்றைய தினமும் மக்கள் நடமாட்டம் அதிகமாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கம்பியில் சிக்கிய யானைக்குட்டி மீட்பு



■ ரீ.எல்.ஜவ்பர்கான்

காட்டுப் பகுதியில் மிருகங்களை வேட்டையாடுவதற்காக சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த கம்பியில் சிக்கி காயமடைந்த யானைக் குட்டியை, பெரும் சிரமத்துக்கு மத்தியில் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வடமுனை காட்டுப் பகுதியில் வைத்தே ஒரு வயது நிரம்பிய இந்த யானைக்குட்டி நேற்று முன்தினம் (06) மாலை மீட்கப்பட்டுள்ளது.

வன ஜீவராசிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சூரிய பண்டாரவின் வழிகாட்டலில், திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட சுற்றுவட்ட அதிகாரி நாகராஜ் சுரேஸ்குமார் தலைமையிலான வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் இந்த யானைக் குட்டியைக் காப்பாற்றியுள்ளனர்.

காப்பாற்றப்பட்ட யானைக் குட்டியை, அம்பாறை மாவட்ட மிருக வைத்தியதிகாரி எம். புஸ்பகுமார, உடனடி வைத்திய உதவிகளை வழங்கினார்.

இதனையடுத்து, அம்பாறை வனவளத் திணைக்களத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கு யானைக் குட்டிக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக மட்டக்களப்பு வன ஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

## தேநீர் தயாரித்த தெய்வானை மரணம்

■ பேரின்பராஜா சபேஷ்



மட்டக்களப்பு, இலுப்படிச்சேனை, காரக்காடு பிரதேசத்தில் மின் உபகரணத்தில் தேநீர் தயாரித்த 56 வயதுடைய பெண்ணொருவர், மின்சாரம் தாக்கி, நேற்று (07) மரணமடைந்துள்ளார்.

வந்தாறுமூலை பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான பேரின்பம் தெய்வானை என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார் என கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

காரக்காடு பகுதியில் வசிக்கும் தனது சகோதரியின் வீட்டில் தங்கியிருந்து, கல்வி கற்கின்ற தனது மகளை நலம் விசாரிக்கச் சென்றிருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மின் உபகரணத்தில் சேதமடைந்திருந்த வயர் வழியாக மின்சாரம் தாக்கியதில் இவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.


சடலத்தை, திடீர் மரண விசாரணை அதிகாரி பார்வையிட்டு, குடும்ப உறவினர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தார்.

செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த சடலம், பிரேத மற்றும் பி.சி.ஆர் பரிசோதனைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## மருந்தகங்களில் திடீர் சோதனை

■ எம்.எஸ்.எம். ஹனீபா



கல்முனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள தனியார் மருந்தகங்களில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட உள்ளதாக, கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ. சுகுணன், நேற்று (07) தெரிவித்தார்.

மருந்தகங்களில் பாரிய குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவற்றை இரு வாரங்களுக்குள் நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும் எனவும் தவறும் பட்சத்தில் சோதனையின் போது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, உரிய மருந்தகம் மூடப்படும். பெரிய நீலாவணை தொடக்கம் பொத்துவில் வரையான எமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள 64 தனியார் மருந்து விற்பனை நிலையங்களும் சுகாதாரத் துறை அதிகாரிகள், விசேட அதிரடிப்படையினர் ஆகியோரால் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது.

சில மருந்தகங்களில் காலவதியான மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன. அசாதாரண சூழ் நிலையைப் பயன்படுத்தி, கூடுதலான விலைக்கு மருந்துகள் விற்பனை செய்வதாக பொது மக்களிடமிருந்து தொடர்ந்தும் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் கூறினார்.

கண்டியில் 12 பாடசாலைகள்

# தேசிய பாடசாலைகளாகின்றன

மொஹொமட் ஆஸிக்

ஆயிரம் தேசிய பாடசாலைகள் அமைக்கும் அரசாங்கத்தின் திட்டத்தின் கீழ், கண்டியில் 12 பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்த கல்வி அமைச்சு அனுமதி அளித்துள்ளதாகப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் நேற்று முன்தினம் (06) நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இதற்கமைய, கட்டுகஸ்தோட்டை புனித அந்தோனியார் மகளிர் கல்லூரி, விகாரமகாதேவி மகளிர் கல்லூரி,



ஹேமமாலி மகளிர் கல்லூரி, சீத்தாதேவி மகளிர் கல்லூரி, சுவர்ணமாலி மகளிர் கல்லூரி, வாரியப்பொல ஸ்ரீ சுமங்கள கல்லூரி, புனித சில்வெஸ்டர்ஸ் கல்லூரி, வித்தியார்த்த கல்லூரி, பேராதனை மத்திய கல்லூரி, லும்பினி ரோயல் கல்லூரி, பெரவஸ்ட் வித்தியாலயம், சரசவி உயன வித்தியாலயம் என்பனவே தரமுயர்த்தப்படவுள்ளன என்றார்.

பிரபல பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் பெற்றோர் கடும் அவஸ்தைக்கு உள்ளாவதால், அதனை நிவர்த்திக்கும் முகமாக புதிதாக ஆயிரம் தேசிய பாடசாலைகளை ஆரம்பித்து அபிவிருத்தி செய்ய அரசாங்கம் மேற்கொண்ட முயற்சியின் ஒரு கட்டமாகவே இப்பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

கடந்த காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட 'அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' என்ற திட்டம், வெறும் பெயர் பலகைக்கு மட்டுமே எல்லைப் படுத்தப்பட்டிருந்தது. எனவே, இப்புதிய திட்டத்தின் மூலம் தேவையான வளங்களை வழங்கி பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும் என்றார்.

# 'பிரஜா வித்யா' ஆரம்பம்

எஸ்.கணேசன்

கொரோனா பரவல் காரணமாக, மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள பல சவால்களை எதிர்கொள்ளும் நிலையில், அமைச்சர் ஜீவன் தொண்டமானின் எண்ணக் கருவுக்கமைய, நாம் பிரஜாசக்தி செயற்றிட்டத்தின் ஊடாக 'பிரஜா வித்யா' கல்வி வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பிரஜாசக்தி செயற்றிட்டத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

இவ்விசேட கல்வி வேலைத்திட்டத்தின் ஊடாக, பல பாடநெறிகள் இலவசமாக




பிரஜாசக்தி பேஸ்புக் தளத்தின் ஊடாக நேரடியாகத் தினமும் பதிவேற்றப்படும். மாணவர்களின் கல்வியை இலகுவாக்குதே எமது நோக்கம்; கற்பித்தலில் ஆர்வமுள்ளோரும் எம்முடன் இணைந்து கொள்ளலாம். நேரடியாக மாணவர்கள் தமக்குத் தேவையான கேள்விகளையும் ஆசிரியர்களிடம் கேட்டுப் பயன்பெறும் மென்பொருள் ஒன்றின் ஊடாக இன்னும் சிறப்பாக நாம் இச்சேவையை வழங்க உள்ளோம்.

மேலும் யூ டியூப் தளம் வாயிலாகவும் இக் காணொளிகள் பதிவேற்றப்படும். மேலும் புலமைப் பரிசில் பரீட்சை, சாதாரண தரம், உயர் தரம் ஆகிய பாடத்திட்டங்களில் நாம் விசேட கவனம் செலுத்தி உள்ளோம். பல பாட நெறிகளை நாம் வழங்க உள்ளோம் எனவும் https://www.facebook.com/prajashakthi.official மேலதிக தகவல்களுக்கு தளத்துக்கு பிரவேசிக்குமாறும் பாரத் அருள்சாமி கேட்டுக்கொண்டார்.

புதிய மாற்றங்களுடன்

# இலங்கை மலையக மன்றம்

இலங்கை வாழ் இந்திய வம்சாவழித் தமிழர்களின் நலன்களுக்காகவும் மாற்றத் பொறுப்பான வளர்ச்சிக்காகவும் 'எழுச்சிபெறும் மலையகம்' என்ற தொனிப்பொருளுடன் கடந்த ஐந்து வருடங்களாக இயங்கிவரும் இலங்கை மலையக மன்றத்தின் நிர்வாகத்தில் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன.

மெய்நிகர் மூலம் இடம்பெற்ற பொதுக்குழு கூட்டத்தின் பரிந்துரைகள் தேசிய சபையால் ஆராயப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில், புதியவர்கள் முக்கிய பொறுப்புகளில் அமர்த்தப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

நிர்வாகக்குழுவில் இடம்பெற்றிருக்கின்ற 15 பேர் தவிர்ந்த, வேறு எந்தவோர் உறுப்பினரின் அமைப்பு சார்ந்த வெளிச்செயற்பாடுகளுக்கு இலங்கை மலையக மன்றம் பொறுப்பேற்காது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, பொருளாளராக பொகவந்தலாவையைச் சேர்ந்த ரேகா ராஜேந்திரனும், அலுவலகப் பொறுப்பாளராக லூல்கந்துரவைச் சேர்ந்த குமாரவேல் கிருஷாந்தனும், ஆண்கள் பிரிவு பொறுப்பாளராக மாவத்தகமவைச் சேர்ந்த கருப்பையா ஜெயசங்கரும், பெண்கள் பிரிவு பொறுப்பாளராக கண்டியைச் சேர்ந்த சீரங்கன் பவானியும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதி பொருளாளராக கேகாலையைச் சேர்ந்த சுரேஷ்குமார் மதுஷாலினியும், ஆண்கள் பிரிவு பிரதி பொறுப்பாளராக மஸ்கெலியாவைச் சேர்ந்த சத்தியவேலு விஜயகாந்தும், பெண்கள் பிரிவு பிரதி பொறுப்பாளராக கண்டியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் திவ்யாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஊடக பிரிவு பொறுப்பாளராக வட்டவளையைச் சேர்ந்த ஆதிசிவம் அஜந்தனும், அச்சு மற்றும் வெளியீடு பிரிவுக்கு பொறுப்பாளராக புஸ்ஸலாவைச் சேர்ந்த செல்வராஜ் மெடோலினாவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் நிர்வாகக்குழு உறுப்பினர்களாக, வேலுசாமி சத்தியசீலன், தர்மலிங்கம் தர்ஷிகா, சந்திரமோகன் நிரோஷா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# நுவரெலியாவில் 5,000ஐ கடந்தது கொரோனா

ஆ.ரமேஸ், பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரை கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தை கடந்துள்ளது. கொரோனா தொற்றினால் இம்மாவட்டத்தில் மரண மடைந்தவர்களின் எண்ணிக்கையும் 74ஆக அதிகரித்துள்ளது என நுவரெலியா மாவட்ட செயலக கொரோனா கண்காணிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் நேற்று (07) மதியம் நிறைவடைந்த 24 மணிநேரத்தில், 134 புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் நுவரெலியா மாவட்டத்திற்குறிய 12 பொது சுகாதார அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட 06 பிரிவுகளான அம்பகமுவயில் 59 பேரும், பொகவந்தலாவையில் 04 பேரும், கொட்டகலையில் 10 பேரும், கொத்மலையில் 29 பேரும், மஸ்கெலியாவில் 25 பேரும், நவ திஸ்பனையில் 06 பேரும், மற்றும் நுவரெலியாவில் ஒருவமென தொற்றாளர்களும் அடங்குகின்றனர். நுவரெலியா மாவட்டத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5, 124 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவித்தது.

இந்நிலையில், தலவாக்கலை கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் 6 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என கொட்டக்கலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது.

அத்தோட்டத்தில், 4 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை கடந்த வாரம் உறுதிசெய்யப்பட்டது. அவர்களுடன் நெருங்கிய தொடர்பிலிருந்த 36 பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் அறிக்கைகள் வெளியாகின. அதில் 3 பெண்கள், ஆண்ணொருவர், இரண்டு சிறுமிகளுக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.





## சமர்செட்டிலும் இடைத்தங்கல் வைத்தியசாலை

மொஹொமட் ஆஸிக்

நாவலப்பிட்டி, சமர்செட் பிரதேசத்தில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நிதியத்தால், கொவிட்- 19 இடைத்தங்கல் வைத்திய நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 9 மில்லியன் ரூபாய் செலவில் 300 கட்டில் வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலையானது, நேற்று முன்தினம் (06) மத்திய மாகாண சுகாதார திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

# பழைய பாரிய மரங்களால் ஆபத்து

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை - மெந்தகந்த, ராசகல பகுதியின் பிரதான வீதி, பீல்லகும்புர- பெரன்தெனிய பகுதிகளிலுள்ள சிறிய வீதிகள், பிரதான வீதியோரங்களில் காணப்படும் மிகப் பழைமையானது பாரிய மரங்களால் எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாமென, இவ்வீதிகளைப் பயன்படுத்தும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னரும் குறித்த தோட்டப் பகுதிகளில் பாரிய மரங்கள் வீழ்ந்து, உயிர் சேதங்கள் ஏற்பட்டுள்ளமையால் தோட்ட நிர்வாகங்கள் அக்கறை காட்டி, இவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இராகலையில் அதிகரிக்கும் கொரோனா தொற்றாளர்கள்

ஆ.ரமேஸ்

கலைப் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் தினமும் ஐவருக்கு குறையாத கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருவதாக தெரிவித்த இராகலை பொது சுகாதார பிரிவின் அதிகாரி லஹிரு விஜயரத்ன நேற்று முன்தினம் (06) இங்கு ஆறு கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இராகலையில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்கள் தொடர்பில் அவரிடம் நேற்று (07) வினவிய போது, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது,

இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெருந் தோட்டப்பகுதிகளில், இப்போது கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துள்ளதுடன், ஐந்து மரணங்கள் தோட்டப்பகுதியிலும், ஒரு மரணம் இராகலை நகரிலும் பதிவாகியுள்ளது.

மேலும், இராகலை பிரதேசத்தில் இதுவரை 312 பேர் கொரோனா தொற்றுக்கு இலக்கான நிலையில், நேற்றுக் காலை பதிவான அறிக்கையின்படி எட்டுப் பேர் புதிய தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் ஊடாகவே, இராகலை பிரதேசத்தில் கொரோனா தொற்று அதிகரிப்பு ஏற்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றுபவர்களின் குடும்பங்கள் அவதானம் பேணும்படியும் தமக்கு கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் அடுத்தவர்களுடன் தொடர்பு பேணாது வைத்தியர் உதவியை நாடுவதில் அக்கறை செலுத்துவதுடன் சுயதனிமை பேணி, சுகாதார தரப்பினருக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பயணக்கட்டுப்பாட்டுக்கு மத்தியில்

# தோட்ட மக்களிடையே மோதல்கள் அதிகரிப்பு

உமாமகேஸ்வரி

கொரோனா வைரஸ் காரணமாக பயணக்கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டுள்ள நிலையில், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தோட்டத் தொழிலாளர்களிடையே வீண் சண்டைகளும் வாக்குவாதங்களும் நாளாந்தம் அதிகரித்துக் காணப்படுவதுடன் ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளுவதும் அதிகரித்து வருகின்றது.

இதேவேளை, தனிப்பட்ட விரோதம் காரணமாக வீட்டுக்கூரைகளுக்கு இரவு நேரங்களில் மறைந்திருந்து கல்லெறியும் சம்பவங்களும் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, காவத்தை, எந்தான, மடலகம தோட்டத்தில் சிலரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப்பாக மாறியதால் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் காயமடைந்து, காவத்தை, இரத்தினபுரி ஆகிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இதில் ஒருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் (06) நள்ளிரவு வேளையில் இடம்பெற்ற இச்சம்பவத்தையடுத்து, இரண்டு சந்தேகநபர்கள் காவத்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு, மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மலசல கூடங்களால்

# நோயாளர்கள் அசௌகரியம்

ஜயக்குமார் ஷஹன்

மொனராகலை மாவட்டத்திலுள்ள சில வைத்தியசாலைகளில் பொது மக்கள், வெளிநோயாளர்கள் பயன்படுத்தும் மலசலகூடங்கள் உரிய பராமரிப்பின்றி காணப்படுவதால் நோயாளர்கள் பாரிய அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மொனராகலை, புத்தல பிரதேசங்களில் அமைந்துள்ள பொது மற்றும் கிராமிய வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவில் உள்ள மலசலகூடங்கள் கழிவுகள் நிறைந்து காணப்படுவதாகவும் காயங்களுக்குப் பயன்படுத்தும் துணிவகைகள் குவிக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

கண்டி மத்திய சந்தை

# வர்த்தக நிலையங்களில் திருட்டு

ஜேஹன் வெஸலிந்ன

பயணக்கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டு, வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில், கண்டி மத்திய சந்தைக்குள் உள்ள 2 வர்த்தக நிலையங்களை உடைத்து, பல இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களை திருடிச் சென்றவர்களைக் கைது செய்வதற்கான விசாரணையை கண்டி பொலிஸ் ஆரம்பித்துள்ளது.

# இணையவழி கல்விக்காக மலையேறும் மாணவர்கள்





ரா. கமல், என்.ஆராச்சி

கேகாலை மாவட்டத்தில், தெஹியோவிட்ட பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முருத்தெட்டுவ, யோகம உட்பட ஆறு கிராமங்களை சேர்ந்தவர்களுக்கு இணைய வசதியை பெற்றுக்கொள்ளக்கூடிய வலையமைப்பு இல்லாமையால் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இம்மாணவர்கள், உயரமான மலைப்பிரதேசங்களுக்கு சென்று, இணைய வழியில் கல்வியைத் தொடர்கின்றனர். இவ்வாறு செல்லும்போது, காட்டுவழி ஊடாகவே பயணிக்கவேண்டும்.

தற்பொழுது தொடர்ந்து மழை பெய்துவருவதால் மலை உச்சியில் கூடாரம் அமைத்து, கல்வி கற்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக மாணவர்களும் பெற்றோர்களும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதாகவும் இதற்குத் தீர்வாக, அரசாங்கம் தொலைப்பேசி நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு குறித்த பிரதேசங்களுக்கு வலையமைப்பை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தொலைபேசி கோபுரங்களை அமைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றனர்.

# இருதரப்பின் நியாயமான கவலைகள் குறித்துக் கவனத்தில் கொள்க

நாடளாவிய ரீதியில் பிரகடனப்படுத்தப்பட்டு இருக்கும் பயணத்தடை, எதிர்வரும் திங்கட்கிழமை (14) முடிவுக்குக் கொண்டுவரப்படுமா என்பது, மக்கள் மத்தியில் எழுந்துள்ள கேள்வியாகும். அடுத்தவாரமும் பயணத்தடையை நீக்கமுடியாத சூழ்நிலை காணப்படுவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம், அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆனால், பொதுமக்களைப் பொறுத்தவரையில், திங்கட்கிழமை (14) பயணத்தடை நீக்கப்படும், தாம் வெளியே சென்று, அவசியமான கருமங்களை முடித்துக்கொள்ள வேண்டும் போன்ற திட்டங்களுடன் இருப்பதால், பயணத்தடை நீட்டிப்பதை அவர்கள் விரும்பவில்லை.

“கொழும்பில் அனைத்து தனியார் நிறுவனங்களும் அத்தியாவசிய துறைகளைப் போன்று இயக்கப்படுகின்றன. பணியாளர்கள் நாளாந்தம் தங்களது பணிகளுக்குச் செல்வதால், கொழும்பு நகரம் தொடர்ந்தும் சனநடமாட்டம் உள்ள இடமாகக் காணப்படுகின்றது” என்று, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தனது கவலையை வெளிப்படுத்தி இருக்கிறது.

பயணத்தடை மூலம் 90 சதவீதமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த எதிர்பார்க்கப்பட்டதாகவும், ஆனால் அது சாத்தியப்படவில்லை என்றும் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன விசனம் தெரிவிக்கிறார்.

மே 25ஆம் திகதி, பொதுமக்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்துகொண்டமையைக் கண்டு அச்சமடைந்த சுகாதாரத் தரப்பு, பயணத்தடை தளர்த்தப்படும் என ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த மே 31, ஜூன் 04 ஆகிய தினங்களில் தளர்த்தப்படக்கூடாதென எச்சரித்ததுடன், நிலைமையை அவதானித்து, ஏழாம் திகதியும் தளர்த்தக்கூடாது என்று கேட்டிருந்தது. சுகாதாரத் தரப்பின் ஆலோசனையைச் செவிமடுத்த அரசாங்கம், மே 25ஆம் திகதியில் இருந்து பயணத்தடையை நீட்டித்து வருகின்றது.

அத்தியாவசிய சேவைகள் தொழிற்பட வேண்டும் என்றால், அந்தச் சேவைகளுடன் தொடர்புடைய சேவைகளை வழங்கும் தனியார் நிறுவனங்களும் தொழிற்படவேண்டிய தேவையுள்ளது. குடிதண்ணீர் விநியோகிக்கும் நிறுவனங்களில் இருந்து, வாகனங்களுக்குத் டயர் மாற்றும் தனியார் நிறுவனங்கள் வரை, இயங்க வேண்டிய தேவை உள்ளது. அத்தகைய சேவைகளை வழங்குவோருக்கு, தடையின்றிப் பயணிப்பதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்றது.

மக்களின் அத்தியாவசிய தேவைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டும் என்றால், இது தவிர்க்கமுடியாததாகும். எனவே, “பணியாளர்கள் நாளாந்தம் தங்களது பணிகளுக்குச் செல்வதால், கொழும்பு நகரம் தொடர்ந்தும் சனநடமாட்டம் உள்ள இடமாகக் காணப்படுகின்றது” என்ற குற்றச்சாட்டு யதார்த்தமானது. ஆனால், இதை எவ்வாறு மட்டுப்படுத்திக் கொள்ளலாம்?

ஒருபக்கம், அனைத்துத் தரப்பு மக்களின் எதிர்ப்பைச் சந்திக்காமல் இருக்க முயல்வதும் இன்னொரு பக்கம், கொரோனா வைரஸின் மூன்றாவது அலையை எதிர்கொள்வதும் ‘பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன்’ என்ற நிலையில் அரசாங்கம் இருக்க முயற்சிக்கக் கூடாது. அதன் விளைவு, பழியை எதிர்கொள்வதாக அமைந்துவிடும்.

தளர்வில்லாப் பயணத்தடையை நீட்டிப்புச் செய்திருக்கும் அரசாங்கம், வேலைவாய்ப்பையும் வருமானத்தையும் இழந்திருக்கும் பெரும்பாலான கீழ், நடுத்தர வகுப்பினர் குறித்து, தொய்வில்லாத அதீத அக்கறை கொள்ளவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட எத்தனிக்கின்றோம்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

உனது திசையும் எனது திசையும் வெவ்வேறானவை. எனினும், எனக்குள் நீயும் உனக்குள் நானும் இருப்பேன். இருந்தாலும், ஏன் இப்படி நடந்தது?

எம்மை மறந்து, சினச் சாக்கடைக்குள் வீழ்ந்து, தத்தளித்து, வாழாமல் பிரிந்து சென்றோம். ‘நல்லது’ என்றே, அப்போது இருவரும் எண்ணியிருப்போம்.

இனி எதுவும் வேண்டாம் எனத் தொலைதூரம் சென்றேன். காலம், எனக்குள் கனகதைகள் சொன்னது. அங்கு தெரிந்ததும் பொய்மையின் வடிவங்களே!

எனக்குள் நான் வரைந்த எண்ணங்கள் சரியானவைதானா? எல்லாமே எனக்குத் தெரியும் என வாழ்ந்தேனா? பலதும் கலந்ததுதானே உலகம்! தவறுகளை மட்டும் துளைத்துப் பார்த்தேனா?

பிறர் எம்மை நோக்குவது, ஏன் புரியாது போனது? நான் செய்தவை எல்லாம், சரியானவைதானோ? என்ன பிழையை, அவளிடம் கண்டேன்?

கண்ணீர் கசிய, அகம்குமைய, நீண்ட பாதையில் என்னை மறந்து, நடந்து செல்கின்றேன்....

திடீரென ஒருவருடன் மோதுப்பட்டேன். விழித்தேன் நான்!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# மேல்நோக்கி நகரும் மரண வரைபு

மொஹமட் பாதுஷா

கொவிட்-19 பெருந்தொற்றின் மூன்றாவது அலையால், இலங்கையில் ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்த உண்மையான தரவுகள் மறைக்கப்படுகின்றன என்றும், உயிரிழப்புகள் நிஜத்தில் இதைவிட அதிகமாக இருக்க வேண்டும் என்றும் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நாட்டில், கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் நாளாந்த மரண வீதமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற சூழலில், மக்களுக்கு உண்மையான தகவல்கள் வழங்கப்படுவதே, அவர்கள் அவதானத்துடன் செயற்பட வழிவகுக்கும் என்ற தோரணையிலேயே இந்தக் கருத்துகள் எழுகின்றன.

ஆனபோதும், உருமாறிய புதியரக வைரஸ்கள், இலங்கையில் எந்தளவுக்கு வீரியத்தன்மையுடனும் பெருவீச்சுடனும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை, மக்கள் புரிந்துகொள்வதற்கு, அரசாங்கம் உத்தியோகபூர்வமாக வெளியிடுகின்ற தகவல்களே போதுமானவை என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும்.

இதுவரையான, கொவிட்-19 மரணங்களின் எண்ணிக்கை 1,700ஐத் தாண்டிவிட்டன. தினமும் 30 இற்கு குறையாத மரணங்கள் நிகழ்கின்றன. எல்லாச் சமூகங்களிலும் இறப்பு எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளன. மரண வரைபு, மேல்நோக்கி வேகமாக நகரத் தொடங்கியுள்ளது.

அதிலும் குறிப்பாக, முஸ்லிம்கள் கொரோனாவால் மரணிக்கும் போக்கு, மீண்டும் உயர்வடைந்துள்ளதாக முஸ்லிம் சிவில் அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளமை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாகும்.

கொரோனா வைரஸ் பரவலின் 1ஆம், 2ஆம் அலைகளால் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவு, அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம், 3ஆவது அலைக்கு நடுவில் சூசகமாக நிறைவேறிய துறைமுக நகர சட்டமூலம், கொழும்பு கடலில் ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ கப்பல் தீப்பிடித்து மூழ்கிக் கொண்டிருப்பதால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சூழலியல், பொருளாதார எதிர்விளைவுகள் என ஏகப்பட்ட நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே, 3ஆவது அலையைக் கட்டுப்படுத்த இத்தேசம் முழுமூச்சாகப் பாடுபடுகின்றது.

அந்தவகையில், பயணக் கட்டுப்பாடு என்ற பெயரில் தொடர்ச்சியாக, கடந்த மூன்று வாரங்களாக பிரகடனப்படுத்தப்படாத ஊரடங்கு ஒன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இன்னும் இதனை நீட்டிப்பதற்கான வாய்ப்புகளும் உள்ளன.

இக்கட்டுப்பாடு, வைரஸ் மேலும் பரவாமலும் புதிய கொத்தணிகள் உருவாகாமலும் தடுப்பதற்கு பெரிதும் உதவியிருக்கின்றது. ஆயினும், கொரோனாவின் தாக்கம் குறைந்தபாடில்லை. உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுகின்ற தரவுகளில் தொற்றாளர்கள், மரணித்தோரின் தொகை அதிகரிக்கின்ற போக்கையே அவதானிக்க முடிகின்றது.

இந்தப் பின்னணியில், குறிப்பாக முஸ்லிம்கள் தொற்றுக்குள்ளாகி மரணிக்கின்ற சதவீதம் மீண்டும் அதிகரிப்பதாக, முஸ்லிம் சிவில் அமைப்புகளும் அவதானிகளும் சுட்டிக்காட்டியுள்ளன.

இங்கு நோய்த் தொற்றையும் மரணத்தையும் கட்டுப்படுத்தும் விடயத்தில் இன, மத பேதங்கள் இல்லை. யார் இறந்தாலும் ஓர் உயிர் போகின்றது. அதன்மூலம் நாட்டின் மனிதவளம் ஒன்றை இழக்கின்றோம்.

மிக முக்கியமாக, மரணிக்கின்ற நபருடைய குடும்பத்தினர், ஓர் உறவை, தமது குடும்பத்துக்குப் பிராணவாயு வழங்கும் ஒரு குடும்பத் தலைவனை பறிகொடுக்கின்றனர். இது மனநிலை ரீதியாக மட்டுமன்றி, வீட்டுப் பொருளாதாரத்திலும் பெரும் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

ஆகவே, முஸ்லிம் ஒருவர் இறந்தாலும் தமிழரோ, சிங்களவோ, வேடுவ சமூகத்தைச் சேர்ந்தவரோ என எவர் மரணித்தாலும், இழப்பின் கனதி சமமானது என்பதே அடிப்படையான விடயமாகும்.

எனவே, ஒவ்வொரு சமூகமும் இது விடயத்தில் சிரத்தையுடன் செயற்பட வேண்டும். முஸ்லிம்கள் இதுவிடயத்தில், சற்று அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்குக் காரணம், முஸ்லிம்களை முதன்மைப்படுத்துவது அல்ல. மாறாக, அநாவசியமான நெருக்கடிகளையும் விமர்சனங்களையும் தவிர்த்துக் கொள்வதாகும்.

முஸ்லிம் சமூகத்தை இனவாதிகளும் தேசியவாத சக்திகளும் பார்க்கின்ற கோணம் வித்தியாசமானது. எது நடந்தாலும், அந்தப் பழியை முஸ்லிம்கள் மீது போடுவதற்கான சந்தர்ப்பத்துக்காக இவ்வாறான சக்திகள் காத்துக் கொண்டிருக்கின்றன.

இலங்கையில் ஆரம்பத்தில் கொவிட்-19 தொற்றுக்கு உள்ளானவர்களும் கணிசமாக இறந்தவர்களும் முஸ்லிம்களாவர். இப்போது போலல்லாமல் அப்போது வேறு நோயின் காரணமாக மரணித்தோரும் கொரோனா கணக்கில் சேர்க்கப்பட்டதாகச் சொல்லப்பட்டதுண்டு.

இவ்வாறு, முஸ்லிம்கள் அதிகளவில் தொற்றுக்குள்ளாகின்றனர் என்ற தோற்றப்பாடு காண்பிக்கப்பட்டதாலும், பல முஸ்லிம் பிரதேசங்கள் நீண்டநாள்களாக முடக்கப்பட்டதாலும், எல்லோருக்கும் பொதுவான தொற்று என்பதையும் கடந்து, வேறுவிதமான விமர்சனம் எழுந்தது.

இந்தியாவைப் போல, இலங்கையிலும் கூட முஸ்லிம்களே பெரும்பாலும் நோய்க் காவிகளாக இருப்பதான ஒரு தோற்றப்பாட்டை மேற்படி சக்திகள் தோற்றுவிக்க முனைந்தன.

ஆனால், பின்னர் ஏனைய இன மக்கள் வாழும் பிரதேசங்களில் அதிக தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாலும் குறிப்பாக சிங்கள சமூகத்தில் இருந்து கொத்துக் கொத்தாக தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதாலும் முஸ்லிம் சமூகத்தின் மீது, தாம் கொண்டிருந்த கருத்துநிலை தவறானது என்பதை, சம்பந்தப்பட்ட தரப்பினர் உணர்ந்தனர்.

இப்போது நாட்டில், பொதுவாகவே மரணங்கள் அதிகரித்து வருகின்றன. இனிவரும் நாள்களின் இந்த எண்ணிக்கை இரு மடங்காகும் என்று ஆய்வாளர்கள், மருத்துவத் துறையினர் கூறுகின்றனர். இந்நிலையில், மீண்டும் முஸ்லிம்களின் மரணங்கள் அதிகரிப்பதாகக் கூறப்படுவது ஓர் அபாய சமிக்கையாகும்.

இன, மத பேதமற்று அனைவரது உயிர்களும் சமமாக மதிக்கப்பட்டு காப்பாற்றப்பட வேண்டும். அதனையும் தாண்டி, முஸ்லிம் சமூகம் இது விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகவுள்ளது. இல்லாவிடில், இன்னுமொரு பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிடலாம்.

முதலாம், இரண்டாம் அலைகளின் போது ஒப்பீட்டளவில் முஸ்லிம் சமூகத்திலேயே அதிக கொரோனா மரணங்கள் பதிவாகின. இருதய நோய், சர்க்கரை வியாதி, சளித்தொல்லை, நெஞ்சுவலி போன்ற நோய்சார் சிக்கல்நிலை இருந்தோர் எனப் பலர் உயிரிழந்தனர்.

சிலர் கொரோனா வைரஸ் காரணமாக மட்டும் உயிரிழந்தனர். வேறு பல நோய்களையும் கொண்டிருந்த சிலர், மரணித்த பின்னர் ‘கொவிட் பொசிடிவ்’ நோயாளாளிகளாக வகைப்படுத்தப்பட்டனர். இவர்கள் எல்லோரும், ‘கொரோனா மரணப் பட்டியலில்’ சேர்க்கப்பட்டார்கள். மருத்துவ ரீதியாக, அது தவறு என்றும் கூற முடியாது.

அதன்பிறகு, 3ஆவது அலை தாக்கம் செலுத்தத் தொடங்கியிருந்தாலும், மே நடுப்பகுதி வரையான காலப்பகுதியில் முஸ்லிம் சமூகத்துக்குள் மட்டுப்படுத்தப்பட்ட மரணங்களே பதிவானதாகச் சொல்ல முடியும். ஓட்டமாவடிக்கு அடக்கம் செய்வதற்காக வந்த ஜனாஸாக்களின் எண்ணிக்கையில் இருந்து, இதனை அறிந்து கொள்ள முடியும். இதற்குப் பல காரணங்கள் கூறப்பட்டன.

முதலாவது, புதுவருடக் கொத்தணி பரவக் காரணமாக அமைந்த பண்டிகைக் காலத்தில், முஸ்லிம்கள் நோன்பு நோற்கத் தொடங்கியிருந்ததால் பயணங்கள், ஒன்றுகூடல்களில் கலந்து கொள்ளவில்லை.

இரண்டாவது, பள்ளிவாசல்களில் இறைவணக்கங்களும் பெருமளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. நோன்புப் பெருநாள் காலப்பகுதியில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. மூன்றாவது, பெருநாளைக்குப் பிறகு கூட, சுற்றுப் பயணங்கள் போவதற்கான வாய்ப்புகள் இம்முறை முஸ்லிம்களுக்கு கிடைக்கவில்லை.

இவ்வாறான காரணங்களால், தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையில் முஸ்லிம்களின் பங்கு முன்னரை விடச் சற்றுக் குறைந்திருந்ததாகக் குறிப்பிட முடியும். ஆனால், நிலைமை இப்போது மாறத் தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக, கூட்டாக அறிக்கையொன்றை விடுத்துள்ள முஸ்லிம் சிவில் அமைப்புகள், முஸ்லிம் சமூகத்துக்குள் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமை குறித்து, கவலை வெளியிட்டுள்ளன. செயற்திறன் மிக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கையை இவ்வமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் நோய் அறிகுறி ஏற்பட்டால், உடனடியாக உரிய தரப்பைத் தொடர்பு கொள்ளுமாறும் கூட்டாக கோரியுள்ள இவ்வமைப்புக்கள், தடுப்பூசி பெற்றுக் கொள்வதற்குப் பள்ளிவாசல் நிர்வாகங்கள் ஊக்குவிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளன. இது கவனிக்கத்தக்க விடயமாகும்.

ஏனெனில், ஆரம்பத்தில் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டு பின்னர், குறைவடைந்திருந்த மரண வீதம், மீண்டும் அதிகரிக்கின்றது என்பதாகும். அத்துடன், முஸ்லிம்களைப் பழிசொல்வதற்கு, இனவாதிகளுக்கும் அவர்களது கழுகுக்கண் ஊடகங்களுக்கும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் கூடாது.

சிங்கள மக்களை விட, முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற சமூகமாகும். எனவே, இந்தப் புதிய ரக வைரஸ், வீரியமாகப் பரவத் தொடங்கினால் நிலைமைகளை கட்டுப்படுத்துவது, ஒரு கட்டத்துக்கு மேல் சாத்திமற்றுப் போகலாம் என்பது நினைவிருக்கட்டும். ஆகவே, முஸ்லிம் சமூகம், சற்று அதிக கரிசனையுடன் செயற்பட வேண்டும்.

ஆனாலொன்று, இது முஸ்லிம் மக்களுக்கு மட்டுமே உரிய அறிவுரையல்ல. மாறாக, ஏனைய இன மக்களும், கொரோனா தொற்றுப் பரவுவதையும் மரணங்கள் நிகழ்வதையும் தடுப்பதற்கு பிரயத்தனப்பட வேண்டும். கொரோனோ வைரஸூக்கு இன, மத பேதங்கள் இல்லை.

## கடிதங்கள்

### விலையேற்றத்தை கட்டுப்படுத்துமாறு வேண்டுகோள்

கொரோனா பயணத்தடையைக் காரணமாக வைத்து, அம்பாறை மாவட்டத்தில் பொருட்களின் விலைகளை, அதிகரித்து விற்கும் நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டும் என்று உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தின் அனைத்து பிரதேசங்களிலும் உணவுப் பொருட்கள் முதல், அனைத்துப் பொருட்களின் விலைகளும் இரண்டு மடங்கு வரையில் உயர்த்தி விற்பனை செய்யப்படுகின்றன.

இதனால், தொழில்கள் அனைத்தும் முடக்கப்பட்டு, வருமானமின்றி வீடுகளில் இருக்கும் பொது மக்களுக்கு, வர்த்தகர்கள் நினைத்தவாறு விலைகளை அதிகரித்து விற்பதால், உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து, உண்ண முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பிரதேச செயலகங்களால் உணவுப் பொருட்களின் விலைகள் தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டிருந்தாலும் அவை வர்த்தகர்களால் கடைப்பிடிக்கப்படாது, ஒவ்வொருவரும் தான்நினைந்த விலைக்கே விற்பனை செய்து வருகிறார்கள். இச்செயற்பாடுகள், பிரதேச செயலகங்களால் கண்காணிக்கப்படவில்லை என்றே, பொதுமக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

நிரந்தர வருமானம் இல்லாதவர்கள், நாளாந்தம் கூலி வேலை செய்பவர்கள் எவ்வித வருமானமும் இன்றி அல்லற்படும் இந்நிலையில், உணவுப் பொருட்களை கொள்வனவு செய்ய முடியாது திண்டாடி வருகின்றனர்.

எனவே, இக்கட்டான காலத்தில் பொருட்களிள் விற்பனை செய்யப்படும் விலைகளை உரிய அதிகாரிகள் கண்காணித்து, விலையேற்றத்தைத் தடுக்குமாறு, உரிய அதிகாரிகளிடம் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

-எம். எல். எஸ். டீன்

சென்னை

The Family Man 2

# தமிழ் அமைப்புகள் கண்டனம்




தமிழர்கள் உணர்வைப் புண்படுத்தும் வகையில் உள்ளதாக *The Family Man 2* இணையத்தொடருக்கு பல தமிழ் அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், இதற்கு மத்தியில் 'அமேசான் ப்ரைமில்' வெளியானது. இதனால், அதிர்ச்சியடைந்த பலரும் இந்த இணையத்தொடருக்கு எதிராக டுவிட்டரில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ராஜ், டிகே இயக்கத்தில், மனோஜ் பாஜ்பாய், பிரியாமணி, சமந்தா நடித்து, ஹிந்தியில் உருவான, *The Family Man 2* இணையத்தொடர் வெளியான நாள் முதல், கடும் எதிர்ப்பு கிளம்பியது. அதில், ராஜி என்ற தமிழ் பேசும் கதாபாத்திரத்தில் சமந்தா நடித்துள்ளார். அவரை பயங்கரவாதி போலவும், பாகிஸ்தான் பயங்கரவாதிகளுடன் தொடர்பு உள்ளது போலவும் காட்டியுள்ளனர்.

குறிப்பாக, தமிழர்களை பயங்கரவாதிகளாக சித்திரித்துள்ளதாக புகார் எழுந்துள்ளது. இதனால், நாம் தமிழர் கட்சி உட்பட பல தமிழ் அமைப்புகள் இந்த இணையத்தொடரைத் தடை செய்ய வேண்டும் எனக் குரல் கொடுத்து வந்தனர்.

தமிழர்களை இழிவுபடுத்தி எடுக்கப்பட்டதாக கூறப்படும், இவ்இணையத்தொடர், பல எதிர்ப்புகளை மீறி 'அமேசான் ப்ரைம்' வெளியானது.

இந்தியா

## தடுப்பூசியை ஏற்றிக்கொண்டார் ஏ.ஆர்.ரகுமான்



இந்தியாவில் அரசியல் பிரபலங்களும், சினிமா நட்சத்திரங்களும் தடுப்பூசி போட்டுக்கொண்ட புகைப்படத்தைப் பதிவிட்டு வருகின்றனர். கொரோனா தடுப்பூசி குறித்து, மக்களிடையே விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானும், அவரது மகன் ஏ.ஆர். அமீனும், கொரோனா தடுப்பூசியை செலுத்திக்கொண்டனர்.



புதுடெல்லி

## ஊரடங்கு தளர்வால் நெரிசல்

புதுடெல்லியில் கடந்த சில நாள்களாக அமலிலிருந்த ஊரடங்கு விதிகளுக்குட்பட்டு தளர்த்தப்பட்டிருந்தது.

இதேவேளை, பொருளாதார மீட்பு நடவடிக்கையாக நேற்று (07) முதல் புதுடெல்லியில் ரயில், பஸ் போக்குவரத்து சேவைகளுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. கடைகள், சந்தைகள் போன்றவைகளும் சுகாதார விதிமுறைகளுக்குட்பட்டு செயற்பட அனுமதிக்கப்பட்டன.

இந்நிலையில், ஒரு சில மணிநேரத்தில் புதுடெல்லி நகரின் முக்கிய சாலைகளில் அதிக அளவிலான வாகனங்கள் சென்றதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதையடுத்து, புதுடெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் தனது டுவிட்டர் பக்கத்தில், 'பொது மக்கள் சமூக இடைவெளியைக் கடைபிடிக்க வேண்டும். முகக் கவசம் அணிவது உள்ளிட்ட கொரோனா பரவல் தடுப்பு விதிமுறைகளைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும். அதில் எந்த தளர்வும் வேண்டாம்' என, குறிப்பிட்டிருந்தார்.

சென்னை

## 'டுவிட்டரில் நீல டிக்கிக்காக சண்டை'



டுவிட்டரில் அரசியல் தலைவர்கள், சினிமா, விளையாட்டு போன்ற பல்துறை பிரபலங்கள், முக்கியஸ்தர்களின் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு, பெயருக்கு பின்னால் நீல நிற குறியீடு இடப்படும். இதன் மூலம் அவர்கள் பெயரில் கணக்கு தொடங்கி மோசடி செய்வது, போலி செய்தி பகிர்வது தடுக்கப்பட்டது. சமீபத்தில் இந்திய துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, ஆர்.எஸ்.எஸ்., தலைவர் மோகன் பகவத் ஆகியோரின் டுவிட்டர் கணக்குகளிலிருந்து நீல நிற டிக் நீக்கப்பட்டது.

இந்த சம்பவம், அரசியல் வட்டாரத்தில் சர்ச்சையானது. ஏற்கனவே, மத்திய அரசின் புதிய தகவல் தொழில்நுட்ப விதிகளுடன் முரண்பட்டு நீதிமன்றத்தை நாடியுள்ளது டுவிட்டர். இந்நிலையில் அரசாங்கத்துக்கு நெருக்கமானவர்களின் டுவிட்டர் கணக்குகளில் கைவைத்ததாக சலசலப்பு எழுந்தது. இதற்கு விளக்கமளித்த டுவிட்டர் செய்தித் தொடர்பாளர், அவர்களின் கணக்குகள் பல மாதங்களாக செயல்படாமல் இருந்ததால், தானாகவே நீல நிற டிக் நீக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் அதனை சேர்த்துள்ளோம் என்றார்.

சென்னை

## 'அறிவிலிகளின் ஆலோசனை சிறு பிள்ளைத்தனமானது'



'ஒன்றிய அரசாங்கம்' என்ற வார்த்தையை திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பயன்படுத்துவது, யாரோ சில அறிவிலிகளின் ஆலோசனை என்பதைவிட, சிறு பிள்ளைத்தனமான பிரசாரம் என, தமிழக பாரதிய ஜனதா கட்சி செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்ட அறிக்கை: 'யூனியன்' என்ற ஆங்கில சொல்லுக்கு, ஒன்றியம் என்று அகராதி சொல்கிறது. எனவே, அது தவறல்ல. ஆனால், ஆங்கிலத்தில் ஒரு தனி வார்த்தைக்கும், வேறு சில சொற்களை இணைத்து சொல்லப்படும் போது, அதன் பொருளுக்கும் உள்ள வேறுபாட்டை, பொது அறிவு உள்ளவர்கள் புரிந்து கொள்வர். இந்திய அரசியலமைப்புச் சட்டம், 'இந்தியா என்கிற பாரதம் பல மாநிலங்கள் ஒன்றடங்கிய, நாடாக இருக்கும்' என்று, தெளிவாகக் குறிப்பிடுகிறது.

பா.ஜ.க ஆட்சியில் தான் ஜார்கண்ட், சத்தீஸ்கர், உத்தரகண்ட் போன்ற, புதிய மாநிலங்கள் உருவாகின. அதுவே, வளர்ச்சிக்கான பாதை என்பதை, யாராலும் மறுக்க முடியாது. சட்டசபை தேர்தல் வெற்றிக்கு பின்னர், திடீரென மத்திய அரசாங்கம் என்ற சொல்லுக்கு பதிலாக, ஒன்றிய அரசு என்ற வார்த்தையை, தி.மு.கவினர் பயன்படுத்தி வருகின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

சாம்ராஜ்நகர்

## விதிமுறைகளை மீறி கோவிலில் திருமணம்

கொரோனா விதிமுறைகளை மீறி, பார்வதி மலையில் கோவில் கதவைத் திறந்து பூஜைகள் செய்ததுடன், அரசியல் தலைவர் குடும்பத்தினரின் திருமணம் நடந்துள்ளமை சர்ச்சைக்கு ஏற்படுத்தியுள்ளது.

ஊரடங்கு அமல்படுத்திய அரசாங்கம், கடுமையான விதிமுறைகளை அமல்படுத்தியது. கோவில்களும் மூடப்பட்டுள்ளன. சாம்ராஜ்நகரில் வரலாற்று பிரசித்தி பெற்ற பார்வதி மலை உள்ளது. அறநிலையத்துறைக்கு உட்பட்ட இக்கோவில், இரு நாள்களுக்கு முன் திறந்து, பூஜைகள் நடத்தப்பட்டுள்ளன. அரசியல் தலைவர் இல்லத்திருமணமும், அக்கோவிலில் நடந்துள்ளது.

கோவிலின் அர்ச்சகர், சிறப்பு பூஜைக்காக, தாசில்தார் அனுமதி பெற்றுள்ளதாக கூறி, அரசியல் தலைவர் குடும்பத்தினரை கோவிலுக்குள் அழைத்துச் சென்று திருமணம் நடத்தியதாகத் தெரிகிறது. இதனால் பொது மக்கள் கோபமடைந்துள்ளனர். "கோவில் அரசியல் ரீதியில் பயன்படுத்தப்படுகிறது. பார்வதி மலையில் நடக்கவிருந்த திருவிழாவும் கொரோனாவால் ரத்து செய்யப்பட்டது. ஆனால், கோவில் கதவை திறந்து திருமணம் நடத்தியது சரியல்ல" எனக் குற்றம் சாட்டியுள்ளனர்.



## மனிதாபிமான உதவி

கல்முனை மாநகர சபையின் உறுப்பினரும் பொதுஜன பெரமுன கட்சியின் முக்கியஸ்தருமான ஏ.எல் றபீக், இப்பகுதியிலுள்ள 75 மீனவர்கள், சுயதொழில் செய்யும் தொழிலாளர்கள், யாசகர்களுக்கு உணவுகளை வழங்கி வைத்தார். இந்த மனிதாபிமானப் பணியை சபை அமர்வில் வழங்கப்படும் மாதாந்த கொடுப்பனவில் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பாறுக் ஷிஹான்)





## மனித நேயப்பணி





கொழும்பு-15 ஸ்ரீ கல்யாணி கங்காராம வீதியில் வசிக்கும் 40 குடும்பங்களுக்கு, உலருணவு பொருள்களை, மோட்சம் அமைப்பினர் வழங்கி வைத்தனர்.







## மூதூர்,வெருகல் மக்களுக்கு உதவி

கொட்டியாபுரப்பற்று சர்வதேச ஒன்றியம் , கந்தையா அறக்கட்டளை ஆகிய தொண்டு நிறுவனங்கள் இணைந்து மூதூர், வெருகல் பிரதேசங்களில் நிவாரணப் பொருள்களை நேற்று (07) வழங்கி வைத்தன.

கொட்டியாபுரப்பற்று சர்வதேச ஒன்றியத்தின் தலைவர் கந்தையா இராசநாயகத்தின் வழிகாட்டலில் ஒன்றிய உறுப்பினர்கள் கந்தசாமி ஜெயசீலன். பத்தினியன் ஜெயசீலன். கிரிதரன், தனக்குமரன், சிவலிங்கம், ரபீசன், வல்லிபரம், வதனா, மேரி, பிரேம், மற்றும் ஊர்ப்பெரியவர்கள் இந் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். (அ . அச்சுதன்)







முல்லைத்தீவு மாவட்டத்தில்

## 60 குடும்பங்களுக்கு உணவு பொருள்கள் வழங்கி வைப்பு



முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், கூழாமுறிப்புக் கிராமத்தில் 25 குடும்பங்களுக்கு உதவும் கரங்கள் அமைப்பால் உலருணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. வடமாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவனேசன் உணவுப் பொருட்களை வழங்கினார். இதேவேளை முள்ளியவளை மாமூலை கயட்டைப் பகுதியில் 35 குடும்பங்களுக்கும் உலருணவுப் பொருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. (நடராசா கிருஸ்ணகுமார்)





இந்திராபுரம் கிராமத்தில்

## 95 குடும்பங்களுக்கு உதவி

சுவிஸ் நாட்டில் வசிக்கும் ஒரு மக்கள் சேவகனின் மகனின் முதலாவது பிறந்தநாள் பரிசாகவும் தாய்மடி அமைப்பின் உதவியுடனும் 95 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளியின் இந்திராபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு இப்பொருள்கள் வழங்கப்பட்டன.

இப்பொருள்களை பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், உப- தவிசாளர் கஜன், உறுப்பினர்கள் ரமேஷ், வீரவாகுதேவர், அமைப்பாளர் வித்தி ஆகியோர் வழங்கி வைத்தனர். (நடராசா கிருஸ்ணகுமார்)



பாகிஸ்தான்

# ரயில்கள் மோதல்; 40 பேர் பலி

தென் பாகிஸ்தான் நகரமான தர்கிக்கு அருகில் இரு ரயில்கள் மோதியதில் குறைந்தது 40 பேர் கொல்லப்பட்டதாகவும், 120க்கும் அதிகமானோர் காயமடைந்ததாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், சிதைவுகளுக்குள் சிக்கித் தப்பித்தவர்களைக் கண்டுபிடிக்க மீட்புப் பணி, இச்செய்தி அச்சுக்கு போகும் வரையில் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

பாகிஸ்தானின் பாரிய நகரான கராச்சிக்கு வடக்காக 440 கிலோ மீற்றர் தூரத்தில் நேற்றுக் காலையே குறித்த மோதல் இடம்பெற்றிருந்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தனர்.

வடக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த 'மில்லட் எக்ஸ்பிரஸ்' ரயிலின் எட்டுப் பெட்டிகள் தடம் புரண்ட நிலையிலேயே குறித்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவித்த உள்ளூர் அதிகாரி, தடம் புரண்ட இப்பெட்டிகளை தெற்கு நோக்கிச் சென்ற சிர் சைட் எக்ஸ்பிரஸ்' பயணிகள் ரயில் மோதியிருந்ததாகக் கூறியுள்ளார்.

ஈராக்

ஐ. அமெரிக்க படைத் தளத்தில்

## ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன



ஐக்கிய அமெரிக்க படைகள் உள்ள தளம் ஒன்றுக்கு மேலே, இரண்டு ட்ரோன்கள் அழிக்கப்பட்டதாக ஈராக்கிய இராணுவம் தெரிவித்துள்ளது.

ஒரு மாதத்துக்கு முன்னால், இதே தளமானது ஆயுதம் தரிக்கப்பட்ட ட்ரோன் ஒன்றால் இலக்கு வைக்கப்பட்டிருந்தது.

ஈராக்கின் மேற்கு பாலைவனத்தில் உள்ள ஐன் அல்-அசாட் விமானத் தளத்தின் மேலால் பறந்த ட்ரோன்களை சுட்டு வீழ்த்த ஐ. அமெரிக்காவின் சி-ரம் பாதுகாப்பு அமைப்பு செயற்படுத்தப்பட்டதாக ஈராக்கிய இராணுவம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.



நைஜீரியா

## போகோ ஹராம் தலைவர் இறந்தார்

போகோ ஹராமின் தலைவர் அபுபக்கர் ஷெகாகு இறந்துள்ளதாக ஐ.எஸ்.ஐ.எஸ் ஆயுதக் குழுவின் மேற்கு ஆபிரிக்க மாகாண ஒலிப் பதிவு ஒன்று நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் 18ஆம் திகதி அளவில் ஷெகாகு இறந்ததாக குறித்த ஆபிரிக்க மாகாணத் தலைவர் அபு முஸாப் அல்-பர்னாவி ஒலிப் பதிவில் தெரிவித்துள்ளார்.

மோதல் ஒன்றையடுத்து தமது போராளிகளால் தேடப்பட்டபோதே, வெடிக்கும் சாதனம் ஒன்றை ஷெகாகு வெடிக்க வைத்ததாக அல்-பர்னாவி கூறியுள்ளார்.

ஐ. அமெரிக்கா

ஹரி – மேகன் தம்பதியின்

## இரண்டாவது பிள்ளைக்கு எலிஸபெத், டயானாவின் பெயர்



பிரித்தானிய இளவரசர் ஹரியின் மனைவி மேகன் மார்க்கிள், தனது இரண்டாவது பிள்ளையைப் பெற்றெடுத்துள்ள நிலையில், குறித்த பெண் பிள்ளைக்கு மகாராணி எலிஸபெத், ஹரியின் தாய் டயனாவின் பெயரை ஹரியும் மேகனும் இட்டுள்ளனர்.

'லிலிபெட் லிலி டயானா மௌன்ட்பட்டன் வின்ட்சர்' என்ற பெயரையுடைய குறித்த குழந்தையானது, ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவில் கடந்த வெள்ளிக்கிழமை ஹரியின் பிரசன்னத்துடன் பிறந்துள்ளது.

எலிஸபெத்தின் குடும்ப செல்லப் பெயரே லில்லிபெட் ஆகுமென்பது குறிப்பிடத்தக்கது.

சீனா

சீனக் கொள்கைகளால் ஸின்ஜியாங்கில்

## உய்ஹுர் பிறப்புகளில் மில்லியன்கள் குறைவு?

சீனக் குடும்பக் கட்டுப்பாட்டு கொள்கைகளால் சீனாவின் தென் ஸின்ஜியாங்கில் 20 ஆண்டுகளுக்குள் உய்ஹுர் மற்றும் ஏனைய சிறுபான்மையினங்களில், 2.6 மில்லியன் தொடக்கம் 4.5 மில்லியன் வரையான பிறப்புக் குறைவு ஏற்படும் என ஜேர்மனிய ஆராய்ச்சியாளர் ஒருவரின் புதிய ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இதேவேளை, கடந்த 2017ஆம் ஆண்டுக்கும் 2019ஆம் ஆண்டுக்கும் இடையில், ஏற்கெனவே பிறப்பு வீதமானது 48.7 சதவீதமாகக் குறைவடைந்துள்ளதாக குறித்த ஆய்வு மேலும் குறிப்பிட்டுள்ளது.





இங்கிலாந்து எதிர் நியூசிலாந்து:

# முதலாவது டெஸ்ட் வெற்றி, தோல்வியின்றி முடிந்தது

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட்டானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது.

லோர்ட்ஸில் கடந்த புதன்கிழமை ஆரம்பித்த இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியின் நேற்று முன்தின ஐந்தாம் நாளை, தமது இரண்டாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 62 ஓட்டங்களைப் பெற்றவாறு நியூசிலாந்து ஆரம்பித்திருந்தது.

இந்நிலையில், குறிப்பிட்ட இடைவெளிகளில் ஒலி றொபின்ஸன், ஸ்டூவர்ட் ப்ரோட், மார்க் வூட், அணித்தலைவர் ஜோ றூட்டிடம் விக்கெட்டுகளை பறிகொடுத்த நியூசிலாந்து, 6 விக்கெட்டுகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியது. துடுப்பாட்டத்தில், டொம் லேதம் 36, றொஸ் டெய்லர் 33, ஹென்றி நிக்கொல்ஸ் 23, பி.ஜெ. வட்லிங் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு, 273 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து றோறி பேர்ண்ஸ், டொம் சிப்லி மூலம் நிதானமான ஆரம்பத்தைப் பெற்றது. பின்னர் பேர்ண்ஸ், அடுத்து வந்த ஸக் க்றொலியை நீல் வக்னர், டிம் சௌதியிடம் அடுத்தடுத்து இழந்தது.

பின்னர் சிப்லி, றூட்டின் இணைப்பாட்டத்தின் மூலம் நிதானமாக இனிங்ஸைக் கையாண்ட இங்கிலாந்து, வக்னரிடம் 40 ஓட்டங்களுடன் றூட் ஆட்டமிழந்தபோதும், சிப்லியின் ஆட்டமிழக்காத 60, ஒலி போப்பின் ஆட்டமிழக்காத 20 ஓட்டங்களுடன் போட்டியை வெற்றி தோல்வியின்றி முடித்துக் கொண்டது. இப்போட்டியின் நாயகனாக டெவோன் கொன்வே தெரிவானார்.



பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடர்:

## வெளியேற்றப்பட்ட செரீனா

பிரெஞ்சுத் தலைநகர் பரிஸில் நடைபெற்றுவரும் பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, உலகின் எட்டாம் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற தனது நான்காவது சுற்றுப் போட்டியில், கஸக்ஸ்தானின் எலெனா றைபரிக்கோவாவை எதிர்கொண்ட ஐக்கிய அமெரிக்காவின் செரீனா, 3-6, 6-7 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

சிநேகபூர்வ போட்டியில்

## குரோஷியாவை வென்ற பெல்ஜியம்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் யூரோ கிண்ணத் தொடருக்கு முன்பதான சிநேகபூர்வ போட்டி ஒன்றில், பெல்ஜியத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற குரோஷியாவுடனான போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் அவ்வணி வென்றது.

பெல்ஜியம் சார்பாகப் பெறப்பட்ட கோலை றொமெலு லுக்காக்கு பெற்றிருந்தார்.

அனைத்து சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும்

## ஒலி றொபின்ஸன் இடை நிறுத்தம்



அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளர் ஒலி றொபின்ஸன் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கடந்த 2012, 2013ஆம் ஆண்டுகளில் றொபின்ஸன் பதிந்த டுவீட்கள் தொடர்பான ஒழுக்க விசாரணை ஒன்றின் முடிவு வரும் வரையிலேயே இவ்வாறு றொபின்ஸன் இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

அந்தவகையில், நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்டில் றொபின்ஸன் பங்கேற்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

அஸார்பைஜான் குரான் பிறி:

## வென்ற சேர்ஜியோ பெரேஸ்




நேற்று முன்தினம் நடைபெற்ற அஸார்பைஜான் குரான் பிறீயில், றெட் புல் அணியின் சேர்ஜியோ பெரேஸ் வென்றார்.

முன்னணியில் இருந்த சக றெட் புல் அணியின் மக்ஸ் வெர்ஸ்டப்பன் டயர் வெடித்து விபத்துக்குள்ளானதுடன், மெர்சிடிஸ் அணியின் லூயிஸ் ஹமில்டன் விபத்தின் பின்னர் முன் டயர்களை இறுக்கி ஓடுபாதையிலிருந்து விலகிய நிலையிலேயே, மெக்ஸிக்கோவின் பெரேஸ் வென்றார்.

இப்பந்தயத்தில் இரண்டாமிடத்தை அஸ்தன் மார்டின் அணியின் செபஸ்டியன் வெட்டலும், மூன்றாமிடத்தை அல்பா தௌரி அணியின் பியரி கஸ்லியும் பெற்றனர்.

இந்நிலையில், இவ்வாண்டுக்கான போர்மியுலா வண் சம்பியன்ஷிப் புள்ளிகள் பட்டியலில் 105 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நெதர்லாந்தின் வெர்ஸ்டப்பன் காணப்படுகின்றார். 101 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் பிரித்தானியாவின் ஹமில்டனும், 69 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் பெரேஸும் காணப்படுகின்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 8 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.